CONNEMARA PUBLIC LIBRARY
JAN 1956

# ஆரம்பக்கல்வி




ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்

ஆசிரியர் : பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி 4 அணு.

மலர் 15 } நவம்பர் 1954 { இதழ் 11

## அழியாத இடம் பெற்ற அநீதி!

★

"அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்,
ஆலயம் பதினாயிரம் நாட்டல்,
அன்ன யாவினும் புண்ணியம் கோடி,
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"

என்று எழில்பட இயம்பினான் எழுச்சிக் கவிஞன் பாரதி.

ஆமாம், அது முற்றிலும் உண்மை என்று இயம்பாதவர்கள் எவரும் இல்லை.

கல்வியின் முன்னேற்றமே ஒரு நாட்டின் முன்னேற்றம் என்பதை எடுத்துக்காட்டாத அரசியல்வாதி யாரும் கிடையாது.

"எண் என்ப, ஏனை எழுத்தென்ப, இவ்விரண்டும் கண் என்ப வாழும் உயிர்க்கு" என்னும் திருக்குறட் திருமொழியைத் திக்கெட்டிலும் சென்று திடநெஞ்சுடன் முழக்கமிடாத ஆட்சியாளர்களும் எங்கும் இல்லை.

"யாதானும் ஊராமால்! நாடாமால்! என் ஒருவன் சாந்துணையும் கல்லாதவாறு?" என்று சற்று கோபத்துடன் கேட்கவும் தயங்காத மேடைப் பேச்சாளர்களைக் காண்பதும் அரிது.

"கல்லார் நெஞ்சில் நில்லார் ஈசன்! தெரியாதோ உங்களுக்கு? பரப்புங்கள் சார் கல்வியை!"—இந்தவிதமாகப் பேசாத பேரறிவாளர்கள் அபூர்வம்.

ஆம்! கல்வியின் அருமை, கல்வியின் பெருமை, கல்வியின் சிறப்பு, கல்வியின் அழகு என்னும் இந்தச் சொற்றொடர்கள்தான் எத்திக்கு நோக்கினும் நித்தமும் ஒலிக்கப்படுகின்றன.

கல்விப் பொருளின் கவின்மிகு வனப்பையும், அந்த வனப்பின் விளைவாக ஏற்படக்கூடிய முன்னேற்றத்தையும், அந்த முன்னேற்றத்தை நாம் அனைவரும் பெற்றுத் தீரவேண்டியதன் அவசியத்தையும், எல்லோரும்தான் எடுத்தெடுத்துப் பேசுகின்றனர். எல்லோருமேதான், காவியமாகவும் ஓவியமாகவும் கட்டுரையாகவும் கவிதையாகவும் தீட்டிக் காட்டுகின்றனர்.

பேனாவை ஆளும் பத்திரிகாசிரியர்களும் சரி, நாட்டை ஆளும் நல்ல அமைச்சர்களும் சரி, கல்வியின் சிறப்பைக் குறித்துப் பேசாமல் இருப்பதில்லை.

அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாக ஒளி வீசுகிறது கல்வியைப் பற்றிய பேச்சு—அது உண்மையிலேயே மகிழ்ச்சிக்குரிய நிலைமைதான்.

கல்வியின் அருமை பெருமைகளைக் கண்ணியவான்கள் அத்தனைபேரும் உணர்ந்து விட்டனர்—உண்மைதான். ஆனால் அத்தகு சிறப்பும் சீரும் செறிந்த கல்வியை இளங்குழந்தைகளுக்கு எடுத்தெடுத்து வழங்கும் ஆரம்ப ஆசிரியர்களின் நிலைமை என்ன?

அவர்களுடைய வாழ்க்கையிலே இன்பமும், குடும்பத்திலே குதூகலமும் தாண்டவமாடுகின்றனவா? இல்லை.

அவர்களுடைய பேச்சிலே புன்னகையும், நடையிலே ஒரு புது முறுக்கும் காணப்படுகின்றனவா? கிடையாது.

அவர்களுடைய தோற்றத்திலே ஒரு கம்பீரமும் உடலத்திலே உறுதியும் நடமாடுகின்றனவா? நிச்சயமாக இல்லை.

கவிழ்ந்த கண்கள், சோர்ந்த முகம், குனிந்த தலை, வாடிய உடல், வறுமையால் துடிக்கும் வாழ்க்கை, கண்ணீர் வடிக்கும் குடும்பம்—இதுதான் அவர்களுடைய நிலை.

இந்த அவல நிலையில்தான் அவர்களை வைத்திருக்கிறது சமுதாயம்.

இத்தகு நிலையில் அவர்கள் இருந்து துடிக்கும்போது அவர்களால் அளிக்கப்படும் கல்வி எப்படி முழுமை உடையதாக இருக்க முடியும்? இதனை எண்ணிப் பார்த்ததாகத் தெரியவில்லை அரசாங்கங்கள்.

கல்வியின் முன்னேற்றம் விரைவில் ஏற்பட வேண்டுமானால் அந்தக் கல்வியை அளிப்பவர்களுக்கு முன்னேற்றம் முதலில் ஏற்பட்டாக வேண்டும். இது எவருக்கும் தெரியக்கூடிய எளிய பிரச்சினை. ஆனால் இந்தப் பிரச்சினையைத்தான் ஆட்சியாளர்கள் இன்னமும் புரிந்து கொண்டதாகத் தெரியவில்லை.

கல்வி கல்வி என்று ஓயாமல் பேசிவிட்டு, அந்தக் கல்வியைப் புகட்டும் கருத்துள்ள பணி புரிபவர்களைக் கேவலமான நிலையிலேயே வைத்திருந்தால், யார் முன்வருவார்கள் ஆசிரியத் தொழில் புரிய? அப்படியே முன் வந்தாலும், வருபவர்களின் செயலிலே ஆர்வமும் எழுச்சியும் எப்படிக் காணப்பட முடியும்?

"ஆரம்பக் கல்வி" இந்தக் கேள்வியைத் தான் கேட்டு வருகிறது சென்ற பதினைந்து ஆண்டுகளாக.

இதே கேள்வியை இப்போது சர்வதேச நிபுணர் குழுவும் கேட்கத் தொடங்கிவிட்டது.

"இந்தியாவில் ஆசிரியர்களின் ஊதியம் சகிக்கமுடியாத அளவு மிகக் குறைவாக இருக்கிறது. அதனைப் போதுமான அளவு உயர்த்தினலொழிய கல்வித் துறையில் கணிசமான முன்னேற்றம் ஏற்படும் என்று எதிர்பார்ப்பதற்கு வழியே கிடையாது."

நம்முடைய சொற்கள் அல்ல இவை. சர்வதேச நிபுணர் குழுவின் வாசகங்கள்.

சகிக்க முடியாத அளவு குறைவாக இருக்கிறதாம் ஆசிரியர்களின் ஊதியம்—தெள்ளத் தெளிவாகக் கூறுகிறது நிபுணர் குழு.

இந்தியாவில் உள்ள நடுத்தரப் பள்ளி ஆசிரியர்களின் நிலையைப் பற்றி ஆராய்ந்து கருத்தை அறிவிக்கும்படி இந்திய அரசாங்கமும் இந்தியாவிலுள்ள போர்டு நிறுவனமும் (Ford Foundation) கூட்டாகச் சேர்ந்து ஒரு பல நாட்டு நிபுணர் குழுவினை நியமித்தனர்.

அந்த அறிஞர் குழுவில் இந்தியாவிலிருந்து நால்வரும், அமெரிக்காவிலிருந்து இருவரும், இங்கிலாந்திலிருந்து ஒருவரும், ஸ்காண்டினேவியாவிலிருந்து ஒருவரும் ஆக எண்மர் இடம் பெற்றிருக்கின்றனர்.

இவ்விதமாக, அமைக்கப்பட்ட சர்வதேச நிபுணர் குழுவின் அறிக்கை நவம்பர் 7-ம் நாளன்று வெளியாகியிருக்கிறது. அந்த அறிக்கையிலேதான் மேலே தரப்பட்ட கருத்துரை இடம் பெற்றிருக்கிறது.

இந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் மட்டும் அமைந்த ஒரு குழு இப்படிக் கூறினாலாவது, அவர்களுக்கு ஏதோ இந்த நாட்டு ஆட்சியாளர்கள் மீது வெறுப்பு, ஆகையால்தான் இப்படியெல்லாம் குறை கூறுகிறார்கள் என்று சொல்லி விடமுடியும். ஆனால் இப்போது தீர்ப்பை அளித்திருப்பதோ சர்வதேச நிபுணர் குழு. இங்கிலாந்திலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் ஸ்காண்டிநேவியாவிலிருந்தும்பிரதிநிதிகள் அதிலே இடம் பெற்றிருக்கின்றனர். எனவே அவர்களுடைய தீர்ப்புக்கு அத்தகு உள்நோக்கம் எதனையும் கற்பித்துவிட முடியாது.

சகிக்கமுடியாத அளவு குறைவாக இருக்கிறது ஊதியம்—கணிசமான அளவு அதனை உயர்த்தியாகவேண்டும்—இல்லையானால் போதுமான அளவு முன்னேற்றம் கல்வித் துறையில் ஒரு நாளும் ஏற்படாது — ஆமாம் — அழுத்தந் திருத்தமாக அறிவிக்கிறது நிபுணர் குழு.

அந்த அறிஞர் குழு இந்த மூன்று முக்கிய உண்மைகளை எடுத்துக்காட்டியதோடு நிற்கவில்லை. ஆட்சியாளர்களாலும் சரி, வேறு

பலராலும் சரி, அடிக்கடி எழுப்பப்படுகிறதே மற்றொரு வாதம், அந்தத் தவறான வாதத்தையும் மண்டையிலடித்து மாய்த்திருக்கிறது நிபுணர் குழு.

ஆசிரியர்களின் ஊதியம் குறைவாகத்தான் இருக்கிறது—உண்மைதான்—ஆனால் அதைப்பற்றி அவர்கள் ஏன் கவலைப்பட வேண்டும்—அவர்கள் உன்னதமான கல்வியை ஊட்டும் உத்தமமான பணியை அல்லவா புரிகிறார்கள்—மனித சமுதாயத்திற்கே குருமார்களாக இருக்கும் ஈடு இணையற்ற நிலையில் அல்லவா அவர்கள் இருக்கிறார்கள்—இத்தகு உயர் நிலையினருக்கு, சம்பளம், ஊதியம், பஞ்சப்படி, ரூபா அணா பைசா, வாழ்க்கை வசதி முதலான சர்வ சாதாரணக் கருத்துகள் மீது கவனம் செல்லலாமா, இவற்றைப் பற்றியெல்லாம் இவர்கள் கவலைப்படலாமா—அப்படிக் கவலைப்படுவது இவர்களுடைய தகுதிக்குத்தான் ஏற்றதா? என்றெல்லாம் சில நேரங்களில் ஆட்சியாளர்கள் சித்தாந்தம் ஒன்றை நிலைநாட்டத் தொடங்கி விடுகின்றனர்.

பணத்தைக் கொண்டுதானா ஒருவனின் மதிப்பு அளக்கப்பட வேண்டும்—அதுவா முறை—அறிவைக் கொண்டுதானே எவரையும் எடை போடவேண்டும்—அறிவிற் சிறந்தவர்களல்லவா ஆசிரியர்கள்—எனவே அவர்கள் ஏன் பணத்தைப்பற்றிப் பதறவேண்டும்? இப்படியும் பேசுகின்றனர் சிற்சில அமைச்சர்கள்.

இப்படியெல்லாம் பேசுகின்றனரே பேரறிவாளர்கள், இவர்கள், தங்களுடைய ஊதியத்தை வேண்டாம் என்று கூறிவிட்டு அதன் பிறகா இப்படிப் பேசுகின்றனர்? இல்லை இல்லை. மாதம் ஒன்றுக்கு ஆயிரம், இரண்டாயிரம் என்று ஊதியம், இலவசமாக மோட்டார் காரும் பங்களாவும், மக்கட் பணத்தில் ஊர் ஊராகச் சுற்றுப்பயணம் செய்யும் வசதியும், இன்ன பிற இன்பங்களையும் குறைவற அநுபவித்துக் கொண்டு அதே நேரத்தில்தான் பேசுகின்றனர் ஆசிரியர்களுக்கேன் ஊதியமென்று.

அறிவுப் பணியாம்—உன்னதமான மதாழிலாம்—குருமார் நிலையாம்—எனவே பணத்தைப்பற்றிய கவலை வேண்டாமாம்—சுவைக்கு உதவுகிற பேச்சா இது?

உலகம் முழுவதும் பணத்தின் அடிப்படையில் இயங்கிவருகிற போது ஆசிரியர்கள் மட்டுமென்ன துறவிகளா பணம் வேண்டாமென்று கூறிவிட? துறவிகள்கூட, சொத்து சுகம் செல்வாக்கு ஆள் அம்பு அணிமணி வசதிகள் அத்தனையும் தேடுவது உலக இயல்பாய்

இருக்கிறதே! இந் நிலையில் ஆசிரியர்கள் மட்டும் எப்படிப் போதுமான ஊதியமின்றி உலகத்தில் உயிர்வாழமுடியும்?

இந்தக் கேள்வியைத்தான் நிபுணர் குழு திட்டவட்டமாகக் கேட்டிருக்கிறது.

"ஆசிரியர்களா, அவர்களல்லவா குருமார்கள் என்று வாயளவில் மிகப் பிரமாதமாகப் பேசப்பட்டு வந்தாலும், நடைமுறையில் அவர்களுக்குத் தரப்படுகிற அந்தஸ்து, அந்த உயரிய பேச்சுகளுக்குச் சிறிதும் ஒத்ததாக இல்லை. தற்கால வாழ்க்கை முறையின் நிர்ப்பந்தங்களினாலும், கல்வியை அளிக்கும் கடமை மேன்மேலும் அரசாங்கத்தின் பொறுப்பாக ஆகிவருவதனாலும், ஆசிரியர்களுடையவும் அவர்களுடைய குடும்பங்களுடையவும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகிறது. இந்தக் கடமையை நிறைவேற்றாமல் இருப்பதற்கு ஒரு காரணமாக அவர்களைக் குருமார்கள் என்று கவுரவமாகச் சொல்லிவருவது ஒரு போதும் நியாயமாகாது."

குருமார்கள் என்கிற குதர்க்கவாதத்தைக் கிளப்பிக் கண்ணியமான ஆசிரியர்களின் உள்ளத்தைக் காரணமின்றிப் புண்படுத்துகின்ற செயல் எத்தனைத் தவறானது என்பதை இதைவிடத் தெளிவாக எப்படி எடுத்துச் சொல்லமுடியும்?

மேலும் கூறுகிறது நிபுணர் குழு:—

"இக்கால உலக நிலையில், எல்லா ஆசிரியர்களும், கடமையே பெரிதெனக் கருதி, ஆசிரியப் பணி புரிவது இயலாத செயல். அப்படி எதிர்பார்ப்பதும், இன்றைய நடைமுறையில், பயனளிக்கக்கூடிய செய்கை ஆகாது. உலக வாழ்க்கைக்கான வசதிகளைத் தேடிக்கொள்ள வேண்டுமென்கிற ஆவல், ஏனைய தொழிலினருக்கு இருப்பதைப்போலவே, ஆசிரியர்களுக்கும் இருக்கத்தான் செய்யும். தொண்டுக்குத்தக்க ஊதியம் பெறுகிறோம் என்கிற எண்ணமே உற்சாகத்தை அளிக்கும்."

ஊதியப் பிரச்சினையைத் தெளிவாக விளக்கியிருக்கிறது நிபுணர் குழு. விளக்கியதோடு நிற்கவில்லை. உடனடியாக அரசாங்கத்தினர் என்ன செய்யவேண்டும் என்பதையும் எடுத்துக் காட்டியிருக்கிறது.

"ஆசிரியர்களுக்கு இருக்கின்ற அதே அளவு தகுதி உடையவர்கள், ஏனைய துறைகளில் பணியாற்றினால் அங்கே அவர்

களுக்கு எத்தகு பொருளாதார அந்தஸ்து கிடைக்குமோ, அதே நிலைமையை ஆசிரியர்களுக்கும் கிடைக்கும்படி செய்வதே தங்களுடைய கொள்கை என்பதை, மத்திய ஆட்சியாளர்களும் மாநில ஆட்சியாளர்களும் உடனடியாக அறிவிக்க வேண்டும்.''

அறிவிக்க வேண்டியதுதானே? அது மிக எளிது. ஆனால், அந்த அறிவிப்பின்படிப் பணியாற்றுவதற்குத் தேவையான பொருளாதார வசதி ஆட்சியாளர்களிடம் ஏது என்று சிலர் கேட்கக் கூடும். அந்தக் கேள்விக்கும் விடையை அளிக்காமலில்லை அறிஞர் குழுவினர்.

'' சரித்திர காலம் முதல் ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்டு வரும் கொடுமையை முழு அளவிலும் உடனடியாகவும் போக்கு மளவுக்கு அரசாங்கத்தினிடம் பணவசதி இல்லை என்பது உண்மைதான். ஆனால், அப்படிப்பட்ட ஒரு கொள்கையைப் பிரகடனம் செய்வதன் மூலமாகவும், அந்தக் கொள்கையை நிறைவேற்றுவதற்கான சில நடவடிக்கைகளையாவது உடனே மேற்கொள்வதன் வாயிலாகவும், ஆசிரியத் தோழர்களுக்கு உற்சாகத்தை யூட்டுவது இயலக்கூடிய செய்கைகளே.''

சில நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ளலாம் என்று கூறிய அறிஞர் குழு, எடுத்துக்காட்டாக சில நடவடிக்கைகளையும் குறிப்பிட்டிருக்கின்றது. அவையாவன :—

1. முழு அளவு உடனே முடியாததால், இயன்ற அளவு ஊதியத்தை உயர்த்துதல்.

2. இலவச வீட்டு வசதி அளித்தல்.

3. பிரயாணக் கட்டணங்களில் சலுகை காட்டுதல்.

4. இலவச மருத்துவ வசதி கொடுத்தல்.

5. ஆசிரியர்களின் உடல்நலப் பாதுகாப்புக்கு ஓர் இன்சூரன்ஸ் திட்டம் ஏற்படுத்தல்.

இவற்றையெல்லாம் உடனடியாகச் செய்ய முடியும் — செய்ய வேண்டும் அரசாங்கத்தினர் — ஆனால், செய்வார்களா — செய்வது மிகவும் அவசியம் என்கிற உணர்ச்சி அவர்களுக்கு ஏற்படுமா?

ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்டு வரும் அந்த வரலாற்றுக் காலம் முதலாகவே இருந்து வருகிறதாம் — வருத்தத்தோடு தெரிவிக்கிறது நிபுணர் குழு.

இந்திய வரலாற்றுச் சுவடியிலேயே இவ்வாறு அழியாத இடம் பெற்றுவிட்ட இந்த அநீதியை, இருபதாம் நூற்றாண்டின் இந்த நடுப் பகுதியிலாவது அழித்தொழிக்க அரசாங்கத்தினர் முன் வருவார்களா?

எதிர்காலம்தான் விடைகூற முடியும்.


# "தமிழ்ச் சுவடி"

## (Tamil Seat of Desk Work)

(ஆசிரியர் வித்துவான் பெ. அண்ணாமலையார், தலைமைத் தமிழ் ஆசிரியர், அர்ச் கேபிரியல் உயர்நிலைப்பள்ளி, சென்னை—1.)

இந்நூல் தமிழ் மொழியின் குறில், நெடில் வேற்றுமையுணர்ந்து படிக்கவும், எழுதவும் வேண்டிய பயிற்சிகளை அளிக்கின்றது. விளக்கப்படங்களையும் கொண்டுள்ளது. பொருளறியும் சக்தியை வளர்க்கக் கூடியது. ஆசிரியர்களுடைய சிரமத்தைக் குறைத்து எளிதில் மாணவர்களின் படிக்கும், எழுதும் ஆற்றலை வளர்ப்பது. முதியோர் கல்விக்குப் பெரிதும் பயன்படுவது. இந்நூலின் விற்பனையினால் வரும் வருவாயின் பெரும் பகுதி நூல் ஆசிரியருடைய நலனுக்கே பயன்படும். ஆகவே ஆசிரிய நண்பர்கள் தங்களால் இயன்ற அளவு ஆதரவு அளிக்க வேண்டிக்கொள்ளப்படுகிறார்கள்.

**இதன் விலை அணா 5.**

தனிப்பிரதி வேண்டுவோர் 6 அணா தபால் தலைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

**கிடைக்குமிடம் :—**

1. **P. R. பச்சையப்ப செட்டியார்**
19, காளத்தி பிள்ளை தெரு, யானைகௌனி, சென்னை—1.

2. **T. வீராசாமி,**
127, புதுத்தெரு, மண்ணடி, சென்னை—1.

# புதுமையான பாடசாலைகள்

(திரு D. E. மாசிலாமணி, ஆசிரியர்,
ஆசிரியர் பயிற்சி மன்றம், விருதம்பட்டு.)

★

ஒரு நாள் சாக்ரடிஸ் ஞானி பல இடங்களில் சுற்றி அலைந்து விட்டு களைப்புடன் ஒரு கிராம பாடசாலைக்குள் நுழைந்தார். அந்தப்பள்ளி, பழங்கால போக்கு வாய்ந்ததாயும், கிராமத்தின் ஒரு கோடியில் பாடசாலை அதிகாரிகள் கண்ணுக்குத் தென் படாததாயும் அமைக்கப்பட்டது போல் தோன்றிற்று!

அந்த இடத்தில், அந்த நேரத்தில் சாக்ரடிஸ் அங்கு தோன்றுவார் என்று ஒருவரும் எதிர் பார்க்கவில்லை. அங்கிருந்த ஒரே ஆசிரியர் வழக்கமான அசுத்த உடைகளை அணிந்து அநாகரீகமான முறையில் உட்கார்ந்து கொண்டிருக்க, இரு மாணவர்கள் ஆசிரியரின் இரு கொழுத்த கன்றுக் குட்டிகளைத் தடவிக் கொண்டிருந்தார்கள்.

சாக்ரடிஸ் சடுதியில் அங்கு தேவதையைப் போல் தோன்றியதைக் கண்டு, அஞ்சி, வேகமாக எழுந்து நின்று தான் அநுபவித்துக் கொண்டிருந்த ஹுக்காவை கால்களுக்குப் பின்னால் மறைக்க முயற்சி செய்தார் அந்த ஆசிரியர். சாக்ரடிஸ் சீர்திருத்தவாதியின் புகழையும், ஞானத்தையும் கேள்வியுற்றிருந்த ஆசிரியர் திடுக்கிட்டார். ஒழுங்கீன ஆசிரியரான அவர் சாக்ரடிஸின் மேல் அதிகம் மதிப்பு வைக்காமல் இருந்தும், அத்தருணத்தில் அவருடைய சொல் அம்புகளுக்கும், கோபப் பார்வைக்கும் அஞ்சி நடுங்கினார்.

**சாக்ரடிஸ் :** (சாந்தமாக) ஆசிரியரே, காலை வந்தனம். நீர் கிராமத்தின் அருமை மாணவர்களை, வாழ்க்கைப் போராட்டத்திற்கு இவ்விதமான முறையில் தான் ஆயத்தம் செய்கிறீர் போலும்?

**ஆசிரியர் :** நீங்கள் சொல்லுவதை யான் அறிந்து கொள்ள முடியவில்லையே! (தடுமாற்றத்துடன்) ஆம். போர்; அல்ல; போராட்டம் என்று சொன்னீர்களே, அது என்னவென்று தெரியவில்லையே!

**சாக்ரடிஸ் :** நான் சொன்னதில் கருத்து நிரம்பியிருக்கிறது. இந்தப் பாடசாலை, கிராம சிறுவர்களை வாழ்க்கைப் போராட்டத்திற்கு ஏற்ற முறையில் பழக்கும் படிக்கு ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. நீரும் அதற்காகவே இங்கு வேலையில் அமர்த்தப்பட்டு இருக்கிறீர்.

(ஆசிரியர் மௌனமாக நிற்க, சாக்ரடிஸ் வகுப்புகளை நன்கு கவனிக்கிறார். சில மாணவர்கள் கிழிந்த ஆடைகளுடனும், சிலர் அசுத்தமான, கழுவப்படாத முகம், மூக்கு, கைகள் இவற்றுடனும் இருப்பதைக் கவனிக்கிறார். சில மாணவர்கள் அசுத்தமான உடலைச் சொரிந்து கொண்டும், மூக்கை நோண்டிக் கொண்டும் இருக்கின்றனர். சிலர் கடுக்கன், வளையல்கள் கூட அணிந்து கொண்டிருக்க பலர் முகத்தில் அம்மை வடுக்கள் காணப்படுகின்றன. மாணவர்கள் தங்கள் இஷ்டப்படி எழுந்து, வகுப்பை விட்டு வெளியில்சென்று சிறிது நேரம் சுற்றி விட்டு தங்கள் இடத்திற்குத் திரும்புகின்றனர். சப்தமாக உயிர் அற்ற பாடங்களை உணர்ச்சியின்றிப் படிக்கின்றனர். தாங்கள் படிப்பதன் கருத்து மாணவர்களுக்குத் தெரியவேயில்லை என்பதை அவர் கவனித்து அறிகிறார்.)

**சாக்ரடிஸ்:** எத்தகைய காட்சியாக இருக்கிறது இது! பிற்காலத்தில் தங்கள் தேசத்தை ஆளவேண்டிய மக்கள் அல்லவா இவர்கள்? இவர்களுக்கேற்ற ஆயத்தம் தான் செய்கிறீர்கள் போலும்!

**ஆசிரியர்:** (திகில் தெளிவடைந்து) நீங்கள் சொல்வதெல்லாம் புதிர் ஆகத்தான் இருக்கிறது! கிராமப்பாடசாலையாகிய இங்கு; ஆசிரியர் பயிற்சி பெற்ற நான், ஏற்ற பாடதிட்டத்தை அனுசரித்தே பாடங்களைக் கற்பிக்கின்றேன்.

**சாக்ரடிஸ்:** சபாஷ்; அதுசரி, ஆனால் நான் தயவு செய்து உங்களிடம் வினாக்கள் கேட்கலாமா?

**ஆசிரியர்:** தாராளமாகக் கேளுங்கள்! ஆனால் எனது அருமையான நேரத்தில் சில நிமிஷங்கள் தான் பேச இயலும்.

**சாக்ரடிஸ்:** அதற்காக மெத்த வந்தனம். முதல் கேள்வி என்னவென்றால் இந்த மாணவர்கள் பிற்கால சந்ததியாரின் தந்தைமார் ஆவார்கள் அல்லவா?

**ஆசிரியர்:** (யூகத்துடன்) ஆம், அதற்கென்ன சந்தேகம்? அவ்வளவு காலம் ஜீவித்திருந்தால், தகப்பனார்கள் ஆகலாம்.

**சாக்ரடிஸ்:** அது சரி, ஆனால் அவர்கள் அவ்வளவு காலம் ஜீவிக்காவிட்டால் அவர்கள் நீண்ட காலம் கல்வி கற்பதும் வீண் அல்லவா?

**ஆசிரியர்:** நீங்கள் கேட்பது யூகமற்ற கேள்வியாக அல்லவா இருக்கிறது? நாம் அனைவரும் நமக்குக் குறிப்பிடப்பட்ட சமயத்தில் நிச்சயம் மாள்வோம்.

**சாக்ரடிஸ்:** அது உண்மை தான். ஆனால் நாம் சிறிது சுகாதார விதிகளை அனுசரித்தால் நிச்சயமாகக் குறிப்பிட்ட சமயத்தைக் காட்டிலும் சில

அதிக வருடங்கள் ஜீவிக்க முடியும். எதிர்பாராத விபத்து, ஆபத்து வந்தாலே யன்றி நமது காலத்தை நாமே அதிகப்படுத்திக் கொள்ளுவது சாத்தியம்.

**ஆசிரியர்** : ஐயா! சில தேசங்களில் நமது தேசத்தை விட நீண்ட காலம் வாழ்கின்றார்கள் என்று கேள்விப்பட்டு இருக்கிறேன்; ஆனால் அதற்கு சீதோஷ்ணஸ்திதியின் உதவியே காரணம் என்று நம்புகிறேன்.

**சாக்ரடிஸ்** : நீர் நினைப்பது இம்மியளவு கூட சரியல்ல; பல்லாண்டுகளுக்குமுன் இங்கிலாந்தில், சாராசரி அதிகமான பேர் இந்திய மக்களைப் போலவே காலமாகிக் கொண்டிருந்தனர்.

**ஆசிரியர்** : இக்காலத்தில் நீண்ட காலம் அவர்கள் வாழ்கிறார்கள் என்று சொல்லுகிறீர்களா?

**சாக்ரடிஸ்** : ஆம், சுகாதார விதிகளைக் கவனமாய் அனுசரித்து ஆரோக்கியமாக வாழ அவர்கள் எடுக்கும் முயற்சியாலேயே அவர்கள் நீண்ட காலம் வாழ முடிகிறது. இந்த விதிகளை எந்நாட்டினரும் தக்கபடி அனுசரித்து நலம் பெறலாம்.

**ஆசிரியர்** ; நம் நாட்டில் ஏன் பலர் அதில் அக்கரைக் கொள்ளவில்லை?

**சாக்ரடிஸ்** : ஆசிரியரே, அதே வினாவைத்தான் நானும் உம்மைக் கேட்க விரும்புகிறேன். இந்த மாணவர்கள் பிற்கால சந்ததியாரின் தகப்பனார்கள் என்பதை ஒப்புக்கொண்டீர். இவர்கள் வாலிபப் பருவம் வரை ஜீவித்திருக்க முடியாவிட்டால், இவர்கள் நீண்ட காலம் கற்கும் கல்வியும் பயனற்றது என்பதை அறிந்து, நீர் ஏன் மாணவர்கள், சந்தோஷமாக வாழ ஏற்ற விதிகளை முதல் பாடமாகக் கற்பிக்க வில்லை?

**ஆசிரியர்**; சாக்ரடிஸ் பெரியாரே' இந்த விதிகளை நானே அறியவில்லை. மேலும் இதைப்பற்றி எனது பாடபுத்தகங்களிலும் எழுதப்படவில்லை.

**சாக்ரடிஸ்** : இதைக் கேட்க எனக்கு வெட்கமாயிருக்கிறது. இப்படிச் சொல்ல உமக்கு வெட்கமில்லையா? நீர் சுகாதார விதிகளைப் பல வருடங்களாகப் போதித்துக் கொண்டு வந்தும் இந்த நேரத்தில் அதைப்பற்றி உமக்குத் தெரியாது என்று துணிந்து சொல்லுகிறீரா?

**ஆசிரியர்** : (விசனமாக) ஐயா, உண்மையாக நான் சுகாதார விதிகளை இன்னும் நன்றாகக் கற்றுக் கொள்ளவில்லை.

**சாக்ரடிஸ்** : நீர் எனக்குக் கொடுக்கக்கூடிய நேரத்திற்குள் நான் உமக்குச் சுகாதார விதிகள்

அனைத்தும் போதிப்பது அருமை. ஆனால் சுருங்கச் சொல்லி விளங்க வைத்தால், முதல் இன்றியமையாத சுகாதார விதி சுத்தம் ஆகும். மாணவர்களும், பெரியவர்களும், முகத்தையும், உடலையும், கைகளையும், நகங்களையும், ஆடையையும் எப்போதும் சுத்தமாய் வைத்திருக்க வேண்டும். அழுக்கே வியாதியை உண்டு பண்ணுகிறது. ஆகையால் நீரும், உமது பிள்ளைகளும், பாடசாலையும், அதன் சுற்றுப்புறங்களும் எப்போதும் சுத்தமாகவே இருக்கும்படிப் பார்த்துக் கொள்ளவேண்டும். ஆசிரியர் ஆகிய நீர், மாணவர்களுக்கு சுத்தத்தின் எடுத்துக்காட்டாக விளங்க வேண்டும்; மாணவர்களுக்கு ஏற்ற முன்மாதிரியாக இருக்க, உமது உடலும் ஆடைகளும் தூய்மை வாய்ந்தனவாய் இருப்பதுடன் நாவும் சுத்தமுள்ளதாய் அநாகரீகமான வார்த்தைகளைப் பேசக்கூடாததாய் இருக்க வேண்டும்.

**ஆசிரியர் :** ஐயா! இது தான் உமது போதனையிலேயே கடினமானதாக எனக்குத் தெரிகின்றது!

**சாக்ரடீஸ் :** ஆசிரியரே, தைரியமாய் இருங்கள். சுத்தமான பழக்க வழக்கங்களைக் கடைப்பிடிக்க ஆரம்பித்தால், அவை விட முடியாத நற்பழக்கங்கள் ஆகிவிடும். அதன் பிறகு நீர் உம்மைப்பற்றியும் உமது மாணவர்களைப் பற்றியும் பெருமைப் பட வழியுண்டு.

**ஆசிரியர் :** ஆனால், நான் எப்படி எனது பாடசாலையின் சுற்றுப் புறத்தை சுத்தமாக வைத்துக் கொள்ளுவது என்று தான் தெரியவில்லை.

**சாக்ரடீஸ் :** பள்ளிக்கு அருகில் ஒரு குழிவெட்டி, சகலவித குப்பைகளையும், காகிதங்களையும் அதிலே போடவேண்டும். குழி கழி விடங்கள் சகலவிதமான கழிவுப் பொருள்களைப் போட வெட்டப்பட்டு, அதையே சிறு மாணவர்களும் உபயோகிக்கும்படி பழக்க வேண்டும். சிறு வயதிலேயே அத்தகைய பழக்கம் அவர்களுக்கு ஏற்பட்டால் அவர்கள் சுய மரியாதைக்காரர்களாகிக் கண்ட இடத்தில் மலஜலம் கழிப்பதை வெறுத்து, விட்டு விடுவார்கள். அதனால் நம்முடைய தேசத்திலிருக்கும் இந்தக் கொடிய கெட்ட பழக்கம் இந்த ஒரே சந்ததியாருடன் முழுவதும் ஒழிந்து விடும். மாணவர்களை வாழ்க்கை போருக்கு ஆயத்தம் செய்வது எப்படி என்பதை, ஆசிரியராகிய நீர் இப்போதாவது உணர்ந்து விட்டீரா?

**ஆசிரியர் :** இப்போது தான் நீங்கள் வாழ்க்கைப் போர் என்று எதைச் சொல்லுகிறீர்கள் என்பதை அறிந்துக்கொண்டேன். ஒவ்வொரு மாணவனும் தனக்கு வரக்கூடிய பல

வித பிணிகள், கஷ்டங்கள் இவற்றுடன் போராடி வெற்றி பெற ஏற்றபடி அவனுக்குப்பல முக்கிய விதிகளைக் கற்பிக்க வேண்டும் என்று குறிப்பிடு கிறீர்கள். பிணிகளையும எதிர்ப் பாராத கஷ்டங்களையும் தடுத்துப் பாதுகாத்துக் கொள்ள, வாழ்நாளை அதிகப் படுத்தித் திறமையுடன் வாழ மாணவனுக்கு ஆயத்தம் தேவை என்பதை ஒப்புக் கொள்ளுகிறேன்.

**சாக்ரடிஸ் :** ஆம்; நீர் முக்கிய விஷயத்தில் ஒரு பாகத்தை அறிந்து கொண்டீர். பாட சாலையில் படிப்பது, பிற்காலத் தில் மறக்கப்படுவதேயில்லை அல்லவா ?

**ஆசிரியர் :** நீர் சொல்லுவது மிக உண்மையே. வாழ்க்கையில் பிற்காலத்தில் கற்றவை மறந்து விட்ட போதிலும் சிறு பிரா யத்தில் கற்றுக் கொண்டவை மறக்கப்படுவதே இல்லை.

**சாக்ரடிஸ் :** மாணவர்கள் சுத்தத் தன்மை, சுத்தமான பழக்க வழக்கங்கள், அம்மை குத் திக் கொள்ளுதல் முதலிய சாதனங்களால் பிணிகளுடன் போராடி வெற்றிகொள்ளப் பயிற்சி அளிக்கப்பட வேண் டும். கொசுக்களைப் பரவ விடா மல் தடுக்கும் வழிகள், சுத்த மான காய்ச்சின தண்ணீரை உபயோகிக்கும் பழக்கம் இவைகளும் அவர்கள் அறிய வேண்டியவை. சில மாணவர் கள் நகைகள் அணிவது வீண் செலவு என்று குறை கூற வழி இருப்பதுடன் அதனால் ஆபத்துகளும் அவர்களுக்கு நேரிடக்கூடும். ஆதலால் அவர் களுக்கு அந்தப் பழக்கத்தை யும தடுப்பது நல்லது.

**ஆசிரியர் :** சாக்ரடிஸ் ஞானியே, நீங்கள் சொல்வதை எல்லாம் நான் ஏற்றுக் கொள்ளு கிறேன். மேலும் சொல்லக் கூடிய அறவுரைகள் இருப்பின் சொல்லுங்கள்.

**சாக்ரடிஸ் :** இரண்டாவது முக்கிய விஷயம் மாணவர்களை சுத்தமான பழக்க வழக்கங் களுடனும், தன்னடக்கம், ஒழுக்கம் இவையும் படியும்படி பயிற்றுவிக்க வேண்டும்.

**ஆசிரியர் :** இதை மாணவர் களுக்கு எவ்வகையில் எளி தாகப் புகட்டலாம் ?

**சாக்ரடிஸ் :** ஒழுக்கத்தையும், தன்னடக்கத்தையும் தாய்மார் களே வீடுகளில் முதல் முத லில்பாடமாகக்கற்பிக்க வேண் டும். ஆனால் அதற்குத் தாய் மார் அனைவரும் படித்தவர் களாகவே இருக்கவேண்டும்.

ஆதலால், நீர் பெற்றோர் தங்கள் பெண் பிள்ளைகளையும் பாடசாலைக்கு அனுப்ப ஏற்ற முயற்சி செய்ய வேண்டும். உமது சிறந்த நடத்தையினு லும் பாடசாலையின் உயர்ந்த நிலையினாலும் பெற்றோர்களுக் கும் உமக்கும் இருக்கக் கூடிய

நல் உறவினாலும் நீர், பெண் கல்வியை விளம்பரப் படுத்த முடியும். அப்போது பெற்றோர்கள் நிச்சயமாகத் தங்கள் புத்திரர்களுடன் புத்திரிகளையும் கல்விக்கூடத்திற்கு அனுப்புவார்கள்.

**ஆசிரியர் :** எங்கள் கிராமத்தில் பெண் பிள்ளைகளும், மாணவர்களும் எப்போதும் சேர்ந்தே ஒற்றுமையாக விளையாடுகிறார்கள். ஆதலால் பெண் கல்வியின் அவசியத்தைப் பெற்றோர்கள் அறிந்தால், கட்டாயம் பெண்களைப் பாடசாலைக்கு அனுப்புவார்கள் என்றே நானும் எண்ணுகிறேன்.

**சாக்ரடிஸ் :** நான் சொன்ன ஆலோசனைகளை மறக்க மாட்டீர் என்று நம்புகிறேன்.

**ஆசிரியர் :** நீர் சொன்னது மறக்க முடியாதவைதான்; ஆனால் அதைப் பின் பற்றுவதில் எவ்வளவு சிரமம் இருக்கப் போகிறதென்று அறியேன்.

**சாக்ரடிஸ் :** சிரமம் கொஞ்சம் இருக்கலாம். ஆனால், அதனால் வரக்கூடிய பலன்களை, நன்மைகளை எண்ணிப் பாருங்கள். ஆரோக்கியமான, நேர்மையான, தன்னம்பிக்கையுள்ள சீரிய இளைஞர்களை நீர் பிற்கால வாழ்க்கைக்கு ஆயத்தம் செய்வது, நாட்டுக்கு எவ்வளவு பெரிய பாக்கியம்! அப்போது கிராமத்தினர் உம்மை என்றென்றும் போற்றுவதுடன், உமது தாய் நாட்டிற்கே நீர் இன்றியமையாதவர் என்று பலர் புகழ வழி ஏற்படும்..

**ஆசிரியர் :** பெரியாரே! உமது லட்சியம் மிகச் சிறந்தது; லட்சியப்பாடசாலையைநிர்வகிக்கும் விதத்தை எனக்குக்கற்பித்தீர். ஆசிரியர்களுடைய பணி எத்தகைய முக்கியத்வம் வாய்ந்தது என்று கூறினீர். ஆண்டவன் நானும் அத்தகைய சிறந்த ஆசிரியராக சேவை செய்ய அருள் புரிவாராக! வணக்கம்.

---

## அறிஞரின் தேன் துளிகள்

உயர்ந்த எண்ணங்கள் உள்ளத்திற்கு விருந்துப் போன்றது; அவைகளே மனிதனை உயர்ந்த நிலைக்கு கொண்டுச் செல்வது.

— எட்கார்.

சிறந்த ஒழுக்கமும், உயர்ந்த நோக்கங்களுமே லட்சிய வாழ்க்கைக்கு அடிப்படையாகும்.

— எமர்ஸ்.

# இந்தக் குழந்தை.....

(A. C. ராயப்பன், செயலாளன், தென்னிந்தியத் திருச்சபை ஆசிரியர் பயிற்சிப்பள்ளி மாணவ ஆசிரியர் கழகம், தாராபுரம்.)

★

**தாராபுரம் தென்னிந்தியத் திருச்சபை செகண்டரி & எலிமென்டரி ஆசிரியர் பயிற்சிப்பள்ளி ஆண்டு விழாவின்போது (6–11–54) பேசுவதற்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதற் பரிசு பெற்ற பேச்சு.**

*குழந்தை ! அழகிய சொல் ; இனிய சொல் ; இன்பத்தின் உறைவிடமாய், இன்னிசைக்கு இலக்கணமாய் அமைந்த சொல். மனதிற்கு மகிழ்ச்சி பெய்து, உணர்ச்சிக்கு உயிரளித்து, உழைப்பால் இழந்த சக்தி யனைத்தையும் ஒரு பொக்கைவாய்ச் சிரிப்பினாலேயே வாரி வழங்கி அயர்ச்சி போக்கும் அரிய மருந்து. அதனாலன்றோ அகில மனைத்தும் போற்றும் அறநெறி ஈந்த தமிழ் மறை ஆசிரியர் குழலின் குளிர்ச்சி மிக்க ஒலியையும், யாழின் இனிய நாதத்தையும் மழலைச் சொல்லின் பின் நிறுத்திக் குழந்தைச் செல்வத்தின் குரலினிமையை வாய் மணக்க வருணித்தார்.*

*மெல்லிய மல்லிகையின் மென்மை, மிருதுவான கரங்கள், அதில் மணி விரல்கள், மணியின் நாதத்தைக் கிளப்பி வரும் வண்ணக்கால்கள், அவை நிகழ்த்தும் குறுநடைக் கோலங்கள், தும்பையின் தூய்மையையும், பஞ்சின் மெதுமையையும் கொண்ட பட்டு மயிர்களைக் கொண்ட சின்னத்தலை, அதில் அமைந்த அமுத முகம், குறுகுறு வென்று கருவண்டின் நிறவழகைத் தன்னகத்தே யடக்கிக் காண்பவர் மனதைக் கட்டியிழுக்கும் பவழமணிக் கண்கள், புன்னகை பூத்துச் சொரிவதற்கென்றே படைக்கப்பட்ட செவ்விதழ்கள், அவை உதிர்க்கும் இன்னிசையைக் கசக்க வைக்கும் மழலைச் சொற்கள், இன்னும் சொல்லச் சொல்ல வாய்மணத்துத் தேனூறும் தித்திக்கும் செங்கரும்பின் இனிமையை அள்ளித் தெளிக்கும் இவ்வலங்காரத் திருவுருவைக் காணுந்தோறும்,*

*" பிள்ளைக்கனியமுதே கண்ணம்மா பேசும் பொற்சித்திரமே*
*அள்ளியணைத்திடவே யென் முன்னே ஆடி வரும் தேனே "*

*என்ற அமரகவியின் அழகு மொழியும்,*

*" ஆசை தவிர்க்க வந்த ஆணழகே சித்திரமே,*
*ஓசை அளித்து மலர் உண்ணுகின்ற தேன் வண்டே',*

*மின்னல் ஒளியே, விலை மதியா ரத்தினமே,*
*கன்னல் பிழிந்து கலந்த கனிச் சாறே"*

என்ற புரட்சிக் கவிஞன் தமிழ்க் குரலும் நம் காதினுள் ரீங்காரமிட்டுக் கொண்டே யிருப்பதில் வியப்பொன்று மில்லை.

காவியத்தில், ஓவியத்தில், கருத்துக் கலைஞர்களின் கனிமொழிகளில், இலக்கியத்தில், ஏடுகளில் இலக்காகத் திகழ்ந்து நின்று, உத்தமர்களின் வாயுரையில், உலகப் பெரியார்களின் உள்ளத்தில், வாழ்க்கைக்கு வழிகாட்டிச் சென்ற வல்லுநர்களின் நாவன்மையில் உறைந்து, அழகுக்கும் இனிமைக்கும் உண்மைக்கும் மென்மைக்கும் உவமானமாகத் திகழ்ந்த அக்குழந்தைகளின் இந் நாளைய நிலையை, ஆசிரியன் என்ற முறையில், அற நெறியூட்டி, ஆக்கமும் ஊக்கமும் நிறைந்த அழகிய குணசித்திரங்களாக அவைகளை உருவாக்கும் ஆசிரியன் என்ற முறையில், உல்லாசத்துடன் உழைப்பையும், நூலறிவுடன் நுண்கலையையும், நாவன்மையுடன் நன்னடத்தையையும், சிந்தனையுடன் சீரிய உணர்வையும், கலையழகுடன் உடலழகையும், வீரத்துடன் விழுமிய அன்பையும், ஒழுக்கம், அடக்கம், வாய்மை ஆகிய அனைத்தையும் அவர்களது வாழ்க்கையின் ஒவ்வொரு நுண்ணிய பகுதியிலும் பாய்ந்து பரவச் செய்து அதன் மூலமாக அவர்கள் வாழும் இனிய, உயரிய வாழ்வினைக் காண்பதே தன் வாழ்வின் பயனாகக் கனவு காணும் ஆசிரியன் என்ற முறையில் உற்று நோக்குவோமாயின் அப்பப்ப! உள்ளம் குமுறுகிறது.

கண்ணையும் கருத்தையும் கவரும் எழிலன்னையின் மறு உருவமாகக் கண்ட அவர்கள், வண்ணம் சிதைக்கப்பட்ட, உருவம் உருக்குலைக்கப்பட்ட குறை வாய்ந்த சிற்பங்களாகக் காட்சியளிக்கும் கண் சிவக்கும் நிலையை நம் தினசரிப் பாதையில் தேடாமலே காணலாம். இதோ ஒரு காட்சி.

பகட்டும் படாடோபமும் ஓரளவு பசையும் உள்ளதாகக் காணப்படும் குடும்பம். காலை உணவைத் தயாரிப்பதில் கருத்தூன்றி யிருக்கும் வேலைக்காரி, அவளது கை வேலையில் குறைகாணக் கருத்தூன்றி நிற்கும் வீட்டு அம்மாள், அவளது சேலையின் நுனியில் தன் இன்பத்தின் எல்லையைக் காணத் துடிக்கும் குறுநடைச் செல்வம். தாய்க்குக் குழந்தையைக் கவனிக்கக் கருத்தில்லை. கருத்தூன்றப்பட்டுள்ளமையம் காலை உணவு. தாயின் அசட்டை வலுக்கிறது. பிள்ளையின் பிடிவாதம் நீடிக்கிறது. முடிவு? தொட்டாலே வாடிவிடும் தும்பைப் பூப் போன்ற மெல்லிய முதுகில் பளார் என்ற தாயின் கோபப் பரிசு, பரிசின் தன்மையைப் பக்கத்தில் உள்ளவர்களுக்கும் பறை சாற்றும் குழந்தையின் அலறல். மனம் பதறுகிறது. மலர்ந்த மனம் அன்னையின் அக்கினி வெம்மைப் பட்டு வாடுகிறது.

பொங்கி யெழுந்த குழந்தையின் மனவெழுச்சி, தாயின் தற்காலிக சௌகரியத்திற்காக, சிறிய வேலைப்பளுவின் கனத்திலிருந்து தப்புவதற்காகக் குழி தோண்டிப் புதைக்கப்படுகிறது. பொறுமையின் பிறப்பிடமாக, அன்பின் இருப்பிடமாகக் குழந்தையின் மனதில் இடம் பெற வேண்டிய தாய், அச்சத்தின் அடையாளமாகக் காட்சியளிக்கத் தொடங்கி விடுகிறுள். மற்ெருரு காட்சி.

அவசர அலுவல்களின் காரணமாக அடைபட்டுக் கிடக்கும் தந்தை. ஆபீஸ் வேலைகளுள் மூழ்கி, அலுப்பின் காரணமாக ஒரு வித ஆத்திர உணர்ச்சியுடன் காட்சியளிக்கும் அவரது உண்மை நிலையைப்பற்றி ஐந்து வயது சிறுவன் என்ன கண்டான்! அப்பா! வென்று ஓடி வருகிறுன். மேசையின்மீது இருக்கும் கண்ணைப் பறிக்கும் வண்ண ஓவியம் அவன் கருத்தைக் கவருகிறது. ஆசையும் ஆராயும் ஆவலும் உந்த, படத்தைப் பிடித்து இழுக்கிறுன். படமும் படத்தின் மேலுள்ள மைக் கூடும் கீழே விழுகிறது. மைக்கூடு இரண்டாகப் பிளக்கிறது. அதன் பிரதிபலன் மகனின் முதுகில் பதிகிறது. தந்தையின் ஆத்திரம், சினங்காக்கப் பழகாத தோஷம், ஒன்றுமறியாத பாலனின் அன்புணர்வை, ஆராய்வூக்கத்தை ஏன்? அறிவுணர்ச்சியைக்கூட அணைத்துவிடுகிறது.

இம்மாதிரி பொறுமைக் குறைவின் காரணமாக, புத்தியீனத்தின் காரணமாக, அவசரத்தின் காரணமாக, ஆத்திரத்தின் காரணமாக, வறுமையின் காரணமாக, வளர்க்கத் தெரியாத குறை காரணமாக, வாரியணைக்க வேண்டிய கைகளினுல் வதை செய்யப்பட்டு அதன் காரணமாகத் தங்கள் வாழ்நாளையே தவருன வழியில் இழுத்துச் செல்லப்படக்கூடிய அவல நிலையை அடைந்த வாடிய இளங்கொழுந்துகளை நாம் காணலாம்.

குழந்தைகளின் உள்ளங்களில் உண்மை யன்பின் துணைகொண்டு உறைய வேண்டிய பெற்ருேர்களின் நிலை இதுவென்ருல், பாசம், பரிவு, பரந்த ஞானம், மாண்புடன் கூடிய மனநூலறிவு ஆகிய அனைத்தையும் பெற்று அவற்றை உபயோகித்து இளஞரின் உள்ளங்களில் குணச் சிறப்புகளைக் குறியிட்டுப் பதியவைக்க வேண்டிய ஆசிரியத் தோழர்களிற் சிலர், அயர்வு, சோம்பல் ஆகிய எதிரிகளின் வயப்பட்டு, கடமை மறந்து, கருத்துக் குலைந்து, வழி தவறி தங்கள் பயிற்சிக் காலங்களில் பெற்ற பண்புகளைக் கை நெகிழ விட்டுக் கொஞ்சிச் சிரித்து வரும் அன்பின் இருப்பிடங்களாகிய குழந்தைகளுக்குக் கொலையாளிகளாகக் காட்சியளிக்கின்றனர் எனின் மிகையாகாது. இயற்கையாகவே நம் கண்கள் தமக்கு முன்பு மிகப் பெரிய அளவிலே செறிந்துகிடக்கும் விஷயங்களை எளிதில் உணருவதில்லை. அப்படிக்கின்றி உணர்ந்தாலும், தமது அனுபவக் குறைவாலும், ஆராயும்

திறமைக் குறைவாலும், அவசரத்தாலும், வேறு விதமாக விளக்கம் தந்து, குழந்தைகள் ஒன்றுக்கும் உதவாதவர்கள் என்ற பட்டத்தைச் சூட்டுவதன் மூலம் தமது அறிவீனத்தையும் அன்புக் குறைவையும் வெளிக்காட்ட விளம்பரம் செய்பவர் பலர்.

வாழ்க்கை முழுவதுமே ஒரு பாடம்; ஒவ்வொரு நாளும் அப் பாடத்தின் ஒவ்வொரு பகுதிகள்; ஒவ்வொரு வாழ்க்கைச் சம்பவமும் அதன் ஒவ்வொரு வரிகள். இப்பாடத்தை நாம் வாழ்வின் இறுதி மட்டும் தொடர்ந்து கற்றே தீர வேண்டும். அனுபவப் பரீட்சையில் புடமிடப்பட்டுத் தேர்ச்சி பெருத எந்தக் கருத்தும் உண்மையும் ஏற்றுக்கொள்ளத் தக்கதல்லவென்ற மெய்யை மறந்து விட்டுக் கற்பனையின் ஊற்ருக, அறிவின் பிறப்பிடமாக, அனுமானத்தின் அழ குருவாகக் கிடைத்துள்ள குழந்தைச் செல்வங்களைப்பற்றி அவசரத் தீர்ப்பு கூறும் ஆசிரியத் தோழர்களுக்கு, ஐரோப்பிய ஆசிரியையாகிய கிளாடிஸ் கென்டன் (Gladys Kenton) என்ற அம்மையாரின் அனுபவத்தின் மூலம் ஓர் உதாரணம் காட்ட விரும்புகிறேன். தனது ஆரம்ப நாட்களின் ஆரம்ப ஆசிரியத் தொழில் அனுபவத்தைக் கொண்டு "குழந்தைகள் ஒன்றுக்கும் உதவாதவர்கள், அவர்கள் எவ்விதச் செயலிலும் கருத்தற்றவர்கள்; அலட்சியமே உருவானவர்கள்; சுயநலமே அவர்களது குணச்சிறப்பு; முதிர்ச்சியற்ற தங்களது மனப் பண்புக்குத் தக்கபடி தங்களைச் சுற்றியுள்ள அனைத்தும் மாறவேண்டும் என்ற பிடிவாதமும் குறைமதியும் படைத்தவர்கள்; பொருட்களைக் கையாளுவதில் அஞ்சத்தக்க அளவு கவனக் குறைவுள்ளவர்கள்; தங்களைத் தாங்களே பேணிக் கொள்ளத் தெரியாதவர்கள்; தங்களுக்கு வேண்டிய சிறிய உதவியையும் பிறர்தானே செய்யவேண்டும் என்ற மனப்பான்மையுடையவர்கள்" என்று பறை சாற்றிய அவ்வம்மையார், பதினறு ஆண்டுகள் ஆரம்பப் பாடசாலையில் பணியாற்றிய பின்பு, "நான் குழந்தைகளின் நற்குணங்களை நம்புகிறேன்; அவர்கள் பகுத்தறிவு நிரம்பியவர்கள். ஆழ்ந்த உணர்ச்சி, உயரிய எண்ணம், உண்மை, அன்பு, நியாயம் ஆகியவற்றைத் திட்டமாகவும் நுட்பமாகவும் அறிதல் ஆகியவற்றில் அவர்களுக்கு இணை அவர்களே தான். உண்மையில் மனித வாழ்வின் இன்பமும், உயர் பயனும் அவர்களது குழந்தைமையில்தான் அடங்கியுள்ளது என்றால் அது மிகையாகாது" என்று குழந்தைகளின் பண்பை அன்பின் உருக்கத்துடன் வருணித்து மகிழ்ந்தார்கள் என்றால், குழந்தைகளைத் தங்கள் நல் வாழ்க்கையில் குறுக்கிடும் குட்டிச் சாத்தான்கள் என்று குறைகூறும் ஆசிரிய நண்பர்களை மனதின் அன்புப் பகுதியைத் தட்டி யெழுப்பிக் குழந்தைகளின் அருள் சொட்டும் முகத்தை ஒரு முறை பார்க்க வேண்டுகிறேன்.

"காலையில் குழந்தைகளின் முதுகில் அடித்து எழுப்புவதற்குப் பதிலாக, ஒவ்வொரு தாய் தந்தையரும் அவர்கள் கன்னத்தில் முத்தமிட்டு எழுப்ப வேண்டும். இதுகூட முடியாதென்று கூற முடியுமா" என்கிறார் இங்கர்ஸால். இது ஒவ்வொரு ஆசிரியருக்கும் பொருந்தும். அதிகாலையில் ஆடி மகிழ்ந்துவரும் குழந்தைகளை, அகமகிழ்வுடன் அன்புக்கரம் விரித்து அழைத்துச் செல்லும் எந்த ஆசிரியரின் வகுப்பும் வாழ்க்கையும், மகிழ்ச்சியும் திருப்தியும் மணக்கும் நந்தவனமாகத் திகழும் என்பதில் ஐயமில்லை. ஆசிரியரின் மேல்கொண்ட அபிமானத்தின் காரணமாகத் தங்கள் வாழ்க்கைக்கே அவரை உதாரணமாகக் கொண்டு ஒவ்வொரு செயலிலும் அவரைப் பின்பற்றும் இயல்புடைய குழந்தைகள் தங்களைச் சுற்றிலும் இருப்பதை ஒவ்வொரு ஆசிரியரும் தன் மனதில் இருத்தித் தனது ஒவ்வொரு நிமிட நடத்தையிலும் தூய்மை, ஒழுக்கம், சுத்தம், கடமையுணர்ச்சி ஆகியவை மிளிரத் தொழில் புரிவாராயின், குழந்தையுலகம் சீரிய தீஞ்சுவைக் கனிச் சோலையாக மாறிவிடும் என்பதில் ஐயமுண்டா?

மேல் நாடுகளில், குழந்தைகள் வீட்டிலும் வெளியிலும் விளையாடுமிடங்களிலும், நண்பர்கள் வீடுகளிலும் அறிவு பெறும் வாய்ப்புகள் அளிக்கப்பட்டு வருவதாக அறிகிறோம். பிரயாணத்தின் போதுகூட அவர்கள் அறிவு பெறும் விதமாக ரயில் வண்டிகளின் கதவுகளிலும், உட் பக்கங்களிலும், அறவுரைகள், குழந்தைப் பாட்டுகள், கேலிப் படங்கள், படக் கதைகள் வரையப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறோம். அந்நிய நாடுகளில் அரசாங்கங்கள் செய்யும் இவ்வரிய பணியை ஏன் ஒவ்வொரு ஆசிரியரும் தனக்கு முன் மாதிரியாகக் கொள்ளக் கூடாது? தனது வகுப்பறையின் சுவர்களில் சின்னஞ்சிறு பாலர்களின் அறிவுக்கும் உணர்விற்கும் உணவளிக்கக் கூடிய முறையில் எத்தனை ஆசிரியர்கள் அழகிய ஓவியங்களையும், அறிவுரை வசனங்களையும் பொருத்தியிருக்கிறார்கள் என்று யோசித்தால் அந்தோ! "நெஞ்சு பொறுக்குதில்லையே" என்றுதான் கூற வருகிறது. "உயரிய கருத்துக்களைக் குழந்தைகளின் உள்ளங்களிலே பதிப்பேன், தீய எண்ணங்களை அகற்றுவேன், எனது நல் நடத்தையின் மூலம், சகல நற்குணங்களும் அவர்களிடம் பதியச் செய்வேன். அன்பு, பொறுமை ஆகிய இரண்டையுமே முற்காலத்தில் 'பிரம்பு' வகித்து வந்த இடத்தில் வைத்துப் பணியாற்றுவேன்" என்று ஒவ்வொரு ஆசிரியரும் தினமும் காலையில் நினைவுறுத்திக் கொள்ளுவது அவர்களின் கடமையுணர்ச்சியையும் கொள்கை உறுதியையும் வளர்க்குமென்பதில் ஐயமில்லை.

பல துறைகளில் ஈடுபட்டுள்ளவர்களும், தங்கள் நிலையை உறுதிப்படுத்தும் வகையில், "சேவை வாரம்," "மரியாதை வாரம்,"

என்று பலவிதமான முறைகளைக் கையாண்டு அக் குறுகிய காலத்தை யாவது தங்கள் நற்செயல்களைப் பயிரிட்டுப் பலன்பெறும் முறையில் பரீட்சை பார்ப்பதை நாம் காண்கிறோம். ஆசிரிய சமுதாயமும், தங்கள் நற்பணியை, தூய்மையைசேவையுணர்வை, செம்மை நாடும் சிறப்புக் குணத்தை உலகினர் அறியும் பொருட்டு "சிறந்த முன்மாதிரி வாரம்" என்ற சிறப்பான செயல் மிளிரும் ஒரு வாரத்தைக் குறித்துத் திட்டமிட்டு, செயல் புரிவாராயின், அது உலகுக்கு ஒளி காட்டுவதாக மாத்திரமின்றி, நம்மை முன் ஏர்களாகக் கொண்டு பின்பற்றக் காத்திருக்கும் இளஞ் சமுதாயத்திற்கும் ஓர் அரிய முன்மாதிரியாக அமையும்.

பொதுவில் ஆசிரியர்களது வழக்கப்பட்ட கூற்றாக இருந்து வருவது "பரம்பரைக் குண இயல்பு" (Heredity) என்ற சொல்லாகும். தங்கள் கவனக் குறைவு, திறமைக் குறைவு, பாலனின் பக்குவமறிந்து சூழ்நிலையை அமைத்துக் கொடுத்து, வாய்ப்புகளை அளித்து, வளர்ச்சிபெற்ற மனிதப் பண்புகளை அவனுள்ளத்திலே விதைக்கத் தவறிய குற்றம் ஆகிய அனைத்தின் பழியையும் மிக அலட்சியமாகவும், சிறிது ஆராய்ச்சி மணம் வீசும் விதத்திலும் "பரம்பரை இயல்பின்" மேல் சுமத்திவிட்டுத் தப்ப முயலும் அன்பர்கள் பலர் உள்ளனர் என்பதைக் குறிப்பிட மனம் வருந்தத்தான் செய்கிறது. ஆனால், அல்லும் பகலும் தங்களது முயற்சியை உண்மைத்தாயின் உருவத்தைக் காணுவதிலேயே செலவிட்டு உலகினுக்குத் தொண்டாற்றுவதே தன் கடனென்று உறுதியுடன் போராடும் உத்தமர்களின் உள்ளம் காட்டும் ஒளியில் "பரம்பரை இயல்பு மாற்ற முடியாதது" என்ற கூற்றும், "ஒவ்வோர் உயிரும் ஒரு சில குறிப்பிட்ட இயல்புகளுடன் பிறக்கின்றன ; அவை மாற்ற முடியாதவை" என்ற மொழியும் மாசு உடையவை எனக் காணலாம்.

சிங்குயாங்குவோ என்ற சீன விஞ்ஞானி, பூனைகள், பூனைக் குட்டிகள், சுண்டெலிகள், மற்ற இன எலிகள் ஆகியவற்றின் துணை கொண்டு, "பூனைக்கு இயற்கையாகவே எலிகளைப் பிடிக்கும் இயல்பு உள்ளதா அன்றி தாய்ப்பூனை எலிகளைப் பிடிப்பதைக் கண்டு அது பழகுகிறதா" என்று அறிய ஒரு சோதனை செய்தார். அச் சோதனைகளின் முடிவில், தாய்ப் பூனைகளிடமிருந்து வேறுபடுத்தி வைக்கப்பட்ட குட்டிகள் எலிகளைப் பிடிக்காமல், எலிகளுடன் சுமுகமாகப் பழகுவதையும், தாயின் அரவணைப்பில் வளர்க்கப்பட்ட குட்டிகள் எலிகளைப் பிடிக்கும் உணர்வைப் பெறுவதையும் நிரூபித்துக் காட்டியதுடன், பழக்கங்களின் துணையால், பூனைகள் ஒரு குறிப்பிட்ட வகை எலிகளை மாத்திரம் பிடிக்கும்படி செய்ய முடியும் என்ற உண்மையையும் வெளியிட்டிருக்கிறார். அதுமட்டுமின்றி, திட்டப்

படியான சில வகைச் சேர்க்கைகளின் மூலம் எலிகளையே பிடிக்காத பூனை இனத்தைச் சிருஷ்டிப்பதும் சாத்தியமே என்றும் தெளிவுறுத்தியிருக்கிறார். எலியைப் பிடிப்பதையே இனத்தொழிலாகக் கொண்டுள்ள பூனையின் நிலை இதுவானால், அது எலியைப் பிடிக்கும் பழக்கத்தைத் தன் தாயின் நடத்தையைக் காண்பதன் மூலமே கற்று, தனது இயல்பாக்கிக் கொள்வது உண்மையானால், குருந்த முன் மாதிரியின் துணையால் அதை எலி பிடிக்கும் தொழிலிலிருந்து திருப்புவது சாத்தியமேயென்றால், தனது சீரிய நடத்தையின் மூலம் சிறுவர்களின் வாழ்க்கைப் பாதையை உருவாக்கும் ஆசிரியரின் பணியைப் பரம்பரை இயல்பு தடை செய்து விடாது என்பது எத்தனை உறுதி என்பதைச் சிந்திக்க வேண்டும்.

சிறந்த அறிவு, மேலான உணர்ச்சி, நேர்மையான முயற்சி ஆகியவற்றை மாணவரிடையே வித்திட்டுப் பயிராக்குவதையே கருமமாகக் கொண்டு சிறந்த மானிட இயல்புகளுடன் கூடிய ஒரு மனிதனை உருவாக்கும் ஒரே நோக்கத்துடன்,

“ குலனருள் தெய்வங் கொள்கை மேன்மை
கலைபயில் தெளிவு கட்டுரை வன்மை
நிலம்மலை நிறை கோல் மலர் நிகர் மாட்சியும்
உலகியலறிவோ டுயர் குணமினையவும்
அமை பவன் நூலுரை யாசிரியன்னே ”

என்ற நன்னூலாரின் மொழியில் காணும் சிறப்பியல்புகளுடன் கூடியவர்களாக ஆசிரிய சமூகத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் திகழுவாராயின் நாட்டின் நலம் பேணும் நன்மக்களைத் தமிழ்த் தாய்க்குப் படைத்துக் கொடுத்த பெருமைக்கும், வருங்காலத் தமிழினத்திற்கு உயர் மாண்பினையும், உண்மை அழகினையும் அளித்து உருக் கொடுக்கும் உயர் பணியைப் புரிந்து வெற்றி கண்டோம் என்ற நற்சான்றுக்கும் உரியவர்களாகும் வாய்ப்பு நம்மை வந்தடையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. ஒளி மங்கி, உருவம் மாறி, கண்ணற்ற ஓவியமாக, கருத்தற்ற காவியமாகக் காட்சியளிக்கும் பல்லாயிரக் கணக்கான இளஞ் செல்வங்களைப் “ பேசும் பொற் சித்திர ”ங்களாக உருமாற்றிய விலை மதிப்பற்ற விழுப்பத்தை சமுதாயம் நம்மீது சொரிந்து போற்றுவதன் மூலம் உண்மைத் தொண்டினுக்காக ஊதியக் குறைவையும், உயரிய பணியின் ஈடுபாட்டில் எளிய வாழ்க்கையையும் உரிமையாக்கிக் கொண்டதன் பயன் கைவரப் பெறும் என்பது கல் மேல் எழுத்தாகும். வணக்கம்.

# ஹொராஷியோ நெல்சன்

[மலைக்கோட்டை டி. எம். ரத்தினம்]

கொந்தளிக்கும் கடல்!

கொதிப்படைந்துள்ள அலைகளை அள்ளி வீசும் அகண்ட கடல்! கொதித்தெழும் உள்ளங்கள்! இரக்கமற்ற கல் நெஞ்சர்கள்!

ஆம்! உல்லாசமாய் பயணம் செய்யும் உலக மக்களின் செல்வங்களைக் கொள்ளையடிக்கும் கொள்ளைக்கூட்டங்கள்!

உழைப்பில்லாமல் ஊதியம் பெறும் உன்மத்தர்கள்! கொள்ளையடித்துக் கவலையின்றிக் காலம் கடத்தும் கயவர்கள்!

பயணம் செய்யும் பணக்காரர்களின் செல்வங்களைச் சூறையாடி, பதை பதைத்த உள்ளத்தை மிதித்து உல்லாச நடை போடும் அரக்கர்கள்!

கடலைக் கடந்து செல்லும் கப்பல்களைக் கவலையின்றித் தாக்கும் தடியர்கள்! அக்கிரமத்தின் ஆணி வேர்கள்!

மக்களின் மனதிலே புயலைக் கிளப்பி, வேதனைப்படுத்தினர்! பயத்தை உண்டு பண்ணிப் பரிதவிக்கச் செய்தனர்!

அயோக்கியர்களின் அட்டகாசங்களுக்கு ஆளாக மக்கள் பயந்தனர்—கப்பலில் செல்ல அஞ்சினர் — துணிந்து செல்ல மனமின்றித் துவண்டனர்.

எங்குப் பார்த்தாலும் கோரக் குரல்கள் கோவெனக் கேட்கத் தொடங்கின. மக்களிடையே பரபரப்பை உண்டு பண்ணி வந்தது. கொள்ளைக்காரர்களின் அட்டகாசம் அவனியை அதிரச் செய்தது. என்ன செய்வதென்று தோன்றாமல் விழித்துக்கொண்டிருந்த சமயம், கப்பல் படையிலே சேர்ந்து தன் உயிரைத் துச்சமென மதித்து, ஊக்கமுடன் பயிற்சி பெற எண்ணியது ஓர் இளைஞனுடைய உள்ளம்!

பயமென்பதையறியாப் பாலன்! பக்குவமறியாச் சிறுவன்! அனுபவமற்ற இளம்சிங்கம்! ஓடி ஆடித் துள்ளி விளையாடும் பருவம்! பார்க்கும் கண்களுக்குப் பரவசமளிக்கும் பிராயம்!

அவன் உள்ளத்திலே உணர்ச்சி தோன்றியது! வகை பிரிந்தது! மக்களின் மனதிலே களிப்பூட்ட ஆர்வம் பொங்கி எழுந்தது! கடலில் செல்வோர்களின் கவலையைப் போக்கக்கருத்திலே எண்ண அலைகள் உதயமாகியது. கொந்தளிப்பை அடக்க அவன் மனம் குமுறியது.

“அற்பர்களின் ஆர்ப்பாட்டத்தை அடக்காமல் அயர்வு

கொள்ளமாட்டேன்! இன்னல் களைத் தீர்க்காமல் இளைப்பாற மாட்டேன்! கொடுமைக்காரர் களின் கொட்டத்திற்கு முடிவு தேடும் வரை எனக்கு அமைதி என்பது கிடையாது" என்று கூறி வீரத்துடன் சென்றான். பயிற்சி பெறப் புறப்பட்டான் தனது பன்னிரண்டாவது வய தில்!

மக்கள் மனதிலே பயத்தை உண்டு பண்ணினான் "நெல்சன்". இவன் செல்வதைக் கண்ட நண் பர்கள் ஏளனம் செய்தனர். உடல் நலிந்திருப்பதைக் கண்டு நையாண்டி செய்தனர். ஆனால், அவன் உள்ளக் கொதிப்பை உணரமுடியவில்லை ஏளனம் செய் வோர்களால்!

பள்ளிக்குச் செல்லும்போதும் சிறிதும் பயமின்றி எதையும் சாதிக்கும் இதயம் பெற்றவன். தனது அருமைச் சகோதரன் "வில்லியத்"திற்கும் வீரத்தை ஊட்டும் ஆக்கம் பெற்றிருந்தான்.

ஒரு சமயம் எங்கும் பனி அதிகமாக வீசிக்கொண்டிருந் தது. வெளியில் தலை நீட்டமுடி யாதவாறு பனிக் கட்டிகள் பாதைகளை மறைத்திருந்தன. காண்பவர்களின் கண்களுக்குத் தண்ணீர் தெரியாதவாறு பனிக் கட்டிகள் உறைந்திருந்தன.

பள்ளிக்குச் செல்லும் பாலர் களைப் பக்குவமாய் அழைத்து, "அருமைக் குழந்தைகளே! என் ஆசைக் கண்மணிகளே! இன்று பனியின் கொடுமையால் நீரோடையில்பனிமூடியிருக்கும். பாதைகள் பார்வைக்குத் தெரி யா. நீரோடையில் வீழ்ந்து விடாதீர்கள். பார்த்துச் செல் லுங்கள். செல்ல முடியாவிடில் திரும்பி வந்துவிடுங்கள். மன திற்கு விரோதமாக, நான் சொல் லுகிறேன் என்பதற்காகத் திரும்பி வந்துவிடாதீர்கள்." என்று கூறி, ஆசைச் செல்வர் களை அன்புடன் வழியனுப்பி, சென்ற வழி நோக்கி சிந்தை குளிர்ந்தாள் பாட்டி.

இருவரும் சென்றனர் இன்ப மாக. பனி உறைந்திருக்கக் கூடாதா என எண்ணினான் வில் லியம். ஓடையை நெருங்கினர். பாதைகள் தென்படவில்லை. வில் லியத்தின் உள்ளம் பூரிப்படைந் தது. எண்ணிய எண்ணம் ஈடேறிவிட்டதாகக் கருதி சந் தோஷப்பட்டான். திரும்பி வீட் டிற்குச் செல்ல விரும்பியது அவன் உள்ளம். தம்பியை அழைத்தான்.

பாட்டி கூறிய கடைசி வார்த் தைகள் நெல்சனின் காதில் ஒலிப் பதுபோல் தோன்றி அவன் உள்ளத்தைத் தொட்டுத் தட வின. உணர்வு கொண்டான்! வீரத்துடன் தமையனின் கரங் களைப் பற்றினான்! பதறாமல் தன்னுடன் பனியின்மேல் இழுத் துச் சென்று பள்ளியை அடைந் தான்! வில்லியத்தின் மனம் வேதனைப்பட்டது. பாட்டியின் வார்த்தையைக் காப்பாற்றிய

நெல்சனின் நெஞ்சம் களிப் படைந்தது.

நெல்சனின் இளமைப் பருவத் துணிவை உணராத மக்கள், அவர் கப்பல் பயிற்சிக்கென செல்லுவதைக் கண்டு நகைப்பது வேடிக்கையாய்த்தான் இருந்தது.

ஓடினான்! பள்ளியை அடைந்து பார்க்கிறான்! பள்ளியிலே பயிற்சி யளித்துப் பண்பு மிக்க ஆசான்— கண்ணியமும் கண்டிப்பும் கொண்ட "கிளாஸிக்ஜான்ஸ்" அவன் கண்களுக்குத் தோற்றமளித்தார். கூறினான் தனது எண்ணங்களை! ஏற்றுக்கொள்ள வேண்டினான்! ஆதரவு கொடுக்க மன்றாடினான்! அன்பிற்கு அடிமைப்பட்ட ஆசானின் ஆதரவையும் பெற்றான்! ஆனந்தப்பட்டான்.

"முயற்சி மெய்வருந்தக் கூலி தரும்," "முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்" என்ற பழமொழியை எடுத்துக் காட்டி ஏன் உலகில் வெற்றிபெற முடியாது? உள்ளத்திலே வீரம் தோன்றினால் உலகத்தையே ஏன் ஆட்டிப்படைக்க முடியாது? மனிதனுக்கு ஊக்கமிருந்தால் உலகில் எதையும் ஏன் சாதிக்க முடியாது? எதையும் தாங்கும் இதயம் இருந்தால் ஏன் தனது லட்சியப் பாதையில் வெற்றியைக் காண முடியாது? என்பதை எடுத்துக் காட்டும் இளைய நெல்சன் இங்கிலாந்து தேசத்தில் "நார்போர்க்" நகரில் மதக்குருவின் புதல்வர்கள் பதினொருவரில் மின்னும் நட்சத்திரமாகத் தோன்றினான்.

தன் வாழ்வில் ஒளிகுன்றா ஜோதியாகத் திகழ்ந்தான் வீரத்துடன். சிற்சில சமயங்களில் இரக்க மனப்பான்மையுள்ளவனாகவும் தோன்றினான்.

ஒரு சமயம் தோட்டத்தின் அழகைக் கண்டு ரசித்தனர் மாணவர்கள். பூத்துக் குலுங்கும் பூக்களையும், பழுத்துத் தொங்கிய பழங்களையும் பார்த்து, அவற்றையடைய முடியாது ஏங்கித் தவித்தனர். துணிவற்றவர்களாய்ப் பார்த்துப் பார்த்து ஏக்கம் கொண்டனர்.

இதைக் கண்ணுற்றான் நெல்சன். அன்புத் தோழர்களின் ஆவலைத் தீர்க்க எண்ணித் துணிவுடன் சென்று பழங்களைப் பறித்து அவர்களுக்கு வழங்கினான். தின்று திருப்தியடைந்தனர் மாணவர்கள்.

இவ்வகைளையறிந்த ஆசிரியர் நெல்சனைக் கூப்பிட்டுக் கண்டித்தார். ஏன் பறித்தாய் என வினவினார். அதற்கு நெல்சன், 'ஐயா! தோட்டத்தைப் பார்வையிட்ட தோழர்களின் கண்களில் பழுத்துத் தொங்கும் பழங்கள் தோற்றமளித்தன. அவற்றைப் பறித்துத் தின்ன ஆவல் கொண்டனர். ஆனால், அவர்கள் மனதில் துணிவில்லை. அவர்கள் ஆவலைப் பூர்த்தி செய்யவே, நான் துணிவுடன் பறித்து, பிரிய

முடன் அளித்தேன்' என்று கூறினுன்.

நெல்சனின் துணிவான பதிலைக் கேட்டு வியப்படைந்தார் ஆசிரியர். மனவுறுதியைக் குறித்து சந்தோஷப்பட்டார். எதிர் காலத்தில் உலகம் போற்றும் நிலையை இவன் அடைவான் என எண்ணி, அவனுக்கு நல்லாசி கூறினுர்.

கப்பல் பயிற்சியைப்பற்றி கேப்டன் சுக்லிங் என்பவர் நன்கு தெளிவுற நெல்சனுக்குப் போதித்தார். நெல்சன் தனது கூரிய புத்தி நுட்பத்தால் பயிற்சியில் சகலவற்றையும் நன்கு ஆராய்ந்துதெரிந்துகொண்டான். இத்துடன் கேப்டனின் நன்மதிப்பையும் பெற்ருன்.

பின்பு கப்பல் வேலையின் நிமித்தம் கார்கஸ் என்ற தீவிற்கு அனுப்பப்பட்டான். புறப்பட்ட நண்பர்கள் ஒன்று கூடினர். பயிற்சிக்கெனப் பயணப்பட்டனர். துணிவைத் துணைக்கொண்டு துணிந்து செல்லப் புறப்பட்டனர் தோழர்கள்.

'ஆர்டிக்' சமுத்திரம் அலைகளை வாரி இறைத்துக்கொண்டிருந்தது. சூரியன் கீழ்வானை நோக்கிச் சென்றுகொண்டிருந்தான். மெதுவாகக் குளிர்ந்த தென்றல் வீசத் தொடங்கியது. ஆர்ப்பரித்துக் கொண்டிருந்த அலைகள் அமைதியுறத் தொடங்கின. உல்லாசமுடன் ஊஞ்சலாடிக்கொண்டிருந்த கடல் நீர் அசைவற்றுப் போனது. கடலில் பெரும் பனிக்கட்டிகள் தென்பட்டன. குளிர் அதிகமாகக் கொட்டியது. கப்பலைக் கடலில் செலுத்த முடியாதவாறு பனிக்கட்டிகள் மலைபோல் குவிந்துகிடந்தன.

அலைகளை அலட்சியமாய்க் கிழித்துச்சென்றுகொண்டிருந்த கப்பல் கடலைக் கடக்க முடியாது நிறுத்தப்பட்டது. கரையை நாடிச் சென்று கப்பலை நிறுத்தினர். அலுப்புத் தீர அயர்ந்து தூங்கினுர்கள் அன்பர்கள். நெல்சனின் நெஞ்சம் தூக்கத்தை விரும்பவில்லை. இன்ப இரவை உல்லாசமாய்ப் போக்கக் கரையை நாடிச் சென்ருன். காடுகளைக் கண்டான்.

வானிலே உலவும் நிலாவழகன் இவனைக் கண்டு சந்தோஷப்பட்டான்! தனது ஒளியை உலகிற்கு அளித்தவண்ணம் பார்த்து ரசித்தான்!

காடுகளைச் சுற்றிப்பார்த்தான். எங்கும் மிருகங்களின் ஒரே இரைச்சல். பலமுள்ள மிருகங்கள் மரங்களை முறிக்கும் சப்தம் காதைத் துளைத்தது. கரடிகள் கண்டவாறு சுற்றிக்கொண்டு இருப்பதைக் கண்ட நெல்சன் கரடியை வேட்டையாட நினைத்து, கைத்துப்பாக்கியால் சுட்டான். சுடுபட்ட கரடி சுருண்டு கீழே விழுந்தது. இறந்த கரடியைப் பார்த்து ஆனந்தப்பட்டான். யாதொரு பயமுமின்றி மிகத் துணிவுடன் அன்றிரவைக் காட்

டிலே கழித்துவிட்டு, பொழுது புலரும்போது கப்பலை வந்தடைந்தான்.

தன் தோழர்களிடம் நடந்த சம்பவங்களை எடுத்துக் கூறினன். இதைக் கேள்வியுற்ற தோழர்கள் இவனது மன உறுதியையும், ஊக்கத்தையும் கண்டு போற்றிப் புகழ்ந்தனர். வியப்புற்றனர். மறுநாள் தாய்நாட்டை நோக்கிப் புறப்பட்டனர்.

நெல்சன் தாய்நாட்டை அடைந்த சின்னுட்களில் நோய் வாய்ப்பட்டான். உடல் நலிவுற்ருன். இரண்டாண்டுகள் உழைப்பின்றி சோம்பிக் கிடந்தான். மனவேதனைப் பட்டான். இனி வாழ்க்கையில் வெற்றியைக் காண முடியாதா என ஏங்கினன்.

இத்தருணத்தில் ஒருநாள் வாடியிருந்த அவன் உள்ளத்தில் வீரம் கிளம்பியது. எண்ணினன், "வாழ்ந்தால் இனி வீரனுகவே வாழ்வேன் — தாய்நாட்டிற்கு வரும் எவ்விதத் தீங்கையும் பார்த்து மகிழமாட்டேன்—வீரத்துடன் எதிர்த்து வெஞ்சமர் புரிவேன்—சோம்பலுடன் இருக்க மாட்டேன்" என்ற முடிவு கொண்டான்.

மறுமுறை 1779-ம் ஆண்டு கப்பல் கேப்டன் பதவியை அடைந்தான். தனது தலைமையில் கப்பல் செல்லப் போவதைக் குறித்து வீரப் பெருமைப்பட்டான். கப்பலில் புறப்பட்டான், கடலைக் கடந்து "க்யூபெக்" நகரை அடைந்தான்.

எழில்மிக்க நகரம்—கண்கவர் காட்சிகள்—பரவசமூட்டும் பரந்த வெளிகள் — உயர்ந்த கோபுரங்கள் — அழகுமிக்க அரண்மனைகள்—பூத்துக்குலுங்கும் பூஞ்சோலைகள் — உள்ளத்தைத் கொள்ளைகொண்டன. இன்ப வாழ்விற்கு ஏற்ற இடம் என எண்ணம் கொண்டான். அங்கே தனது இருப்பிடத்தை அமர்த்திக்கொண்டான். மாலை வேளைகளில் மணல்வெளிக்குச் சென்று பொழுதைப் போக்கினன்.

அங்கே மங்கை ஒருவளைக் கண்டான். அவளிடம் மனதைப் பறிகொடுத்தான். காதல் வானிலே கணக்கற்ற வேகத்துடன் பறந்து சென்ருன்.

ஆனல் இவர்கள் காதல் நீண்ட காலம் நீடிக்கவில்லை. இன்ப வாழ்வு தடைப்பட்டது. மின்னலைப்போல் மின்னி மறைந்தது.

க்யூபெக் நகரைவிட்டு, பின் மேற்கிந்தியத் தீவுகளையடைந்து அங்கு சில காலம் தங்கினன். அங்கு 1787-ம் ஆண்டு "பிரான்சிஸ் நெஸ்பிட்" என்ற ஒரு விதவையின் மேல் மோகங்கொண்டு, அவளைத் தன் மனைவியாக்கிக் கொண்டான்.

1793-ம் ஆண்டு இங்கிலாந்திற்கும், பிரான்சுக்கும் பெரும் போர் மூண்டது. நெல்சன் "அகமெம்னன்" என்ற கப்பலில் மத்திய தரைக் கடலைக் கடந்து சென்று பிரஞ்சுப் படைகளை எதிர்த்துப் போர் புரிந்தான்.

உலகம் போற்றும் வீரன் நெப்போலியன் பெரும் படையுடன் "நேப்பிள்ஸ்" நகரைத் தாக்கினன். வெஞ்சமர் புரிந்தான். கணக்கற்ற வீரர்கள் மடிந்தனர். வெற்றி, வெற்றியென வெண் சங்கை ஊதிவரும் நெப்போலியனின் படைகள் சற்றும் இரக்கமின்றி எதிரிப் படைகளைச் சின்னபின்னப்படுத்தி சிதறியோடச் செய்தன.

எரிமலைகள்போல் கொதித்து வரும் வீரர்களை எதிர்க்க அஞ்சினர் நேப்பிள்ஸ் நகரத்தினர். பிணக் குவியல்களைப் பார்க்கச் சகிக்கவில்லை. மக்கள் பதறினர்.

முதலையைப்போல் கடலிலே நீந்தித் திரியும் நெல்சன் "நேப்பில்ஸ்" நகரை வந்தடைந்தான். நெப்போலியனின் கொடுஞ்செயலைக் கண்டு புயலெனக் கிளம்பினன். நெப்போலியனின் படைகளை வீரத்துடன் எதிர்த்தான். உயிரைப் பொருட்படுத்தாது போர் புரிந்து எதிரிகளின் படைகளை எதிர்நிற்க முடியாது விரட்டினன். நெப்போலியனின் படைகள் புறமுதுகு காட்டி ஓடின. வீரனின் உள்ளத்தில் வேதனையை உருவாக்கி வெற்றிவாகை சூடியவன் நெல்சன் ஒருவனே!

இவனுடைய வீரத்தைக்கண்டு எதிரிகள் அஞ்சினர். வெற்றி கண்ட வீரர்கள் நெல்சனுக்கு மலர்மாலை சூட்டினர். நேப்பில்ஸ் நகரத்து இளவரசி வீரனுக்கு வாழ்த்துக்கூறி வரவேற்றுள் — விருந்திற்கு அழைத்தாள்.

விருந்தினனகச் சென்ற நெல்சன், இளவரசியின் தோழியாக இருந்த "லேடி ஹேமில்டன்" என்பவளைச் சந்தித்தான். அழகு படைத்த முகத்தைக் கண்டு அவள்மேல் ஆசைகொண்டான். தன் ஆசைக்கு அவளைப் பலியாக்கிக்கொள்ள அவன் எண்ணம் அவனைத் தூண்டியது.

அவளும், அவன்மேல் காதல் போதையில் சிந்தையை மறந்து உள்ளத்தைப் பறிகொடுத்து, அவன் உள்ளத்து உணர்ச்சிக்கு ஒப்புதல் கூறினுள். தன்னை அவனுக்கு ஒப்படைத்து விட்டாள். இருவரும் காதல் திருமணம் செய்துகொண்டனர்.

முன்பு ஒருவளைக் காதல் திருமணம் செய்துள்ளானே என வாசகர்கள் கேட்கலாம். இவனுடைய மோகத்தால் அவளை விவாகரத்து செய்துவிட்டான். மேல்நாடுகளில் காதல்போதையில் கருத்திழந்து கண்டவாறு சுற்றியலைந்து, விவாகரத்து செய்யும் தொத்துநோய் அதிகமாய் இருந்து வருவதை வாசகர்கள் உணருமாறு கோருகிறேம்.

அழகு வெள்ளத்திலே நீந்திச் சென்ற இவ்வாரணங்கு தன் வாழ்விலே நெல்சனை மூன்ருவது கணவனுகப் பெற்றுள்.

முதலில் இவளை மாலையிட்ட மணவாளன் பணத்திற்கு அடிமையாகி, பருவமங்கையான இவளை "சர் வில்லியம் ஹேமில்டன்" என்பவனுக்கு விற்று உல்லாச வாழ்வு வாழச் சென்றுவிட்டான்.

ஹாமில்ட்டனுக்கு வாழ்விலே வறுமை தோன்ற ஆரம்பித்த வுடன், மங்கையை மன்னனின் மனைவிக்கு ஏவல் தொழில் புரிய தோழியாக்கினான். தோழியாகப் பணிபுரிந்த லேடி ஹாமில்ட்டன் காதல் தோழனாக நெல்சனைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள்.

இவர்கள் காதல் வாழ்வு கரை புரண்டு ஓடுகையில், வெள்ளப் பெருக்கை, அணை போட்டுத் தடுப்பது போன்ற நிகழ்ச்சி தோன்றியது. வேலையின் நிமித்தம் நெல்சன் "லோகார்ணு" வுக்கு செல்லவேண்டியதாயிற்று. அச்சந்தர்ப்பத்தில் நாடு பிடிக் கும்நயவஞ்சகர்களெனப்பிரசித்தி பெற்ற பிரஞ்சு தேசத்தவர்களால் "நேப்பிள்ஸ்" நகரம் தாக்கப்பட்டு கைப்பற்றப்பட்டது. பிரான்சின் வெற்றிக்கு வழி வகுத்துக் கொடுத்த வஞ்சகன் "காராசிய லோ" என்பவனை, மக்கள் மன் றத்தில் நிறுத்தி, மக்களின் ஏகோபித்த முடிவின்படி தூக்கி விட்டான் நெல்சன்.

லேடி ஹாமில்ட்டன் ஐந்து ஆண்டு காலம் தன்னைவிட்டுப் பிரிந்திருந்த தன் ஆருயிர்க் காத லனைக் காணத் துடிதுடித்துச் சென்றாள். கடலில் அகப்பட்டுத் தத்தளிப்பவன் கரையைக் கண் டதுபோல் — கண்ணற்றவன் கண்ணின் பார்வை பெற்றது போன்ற உணர்ச்சி அவள் உள் ளத்தில் ஏற்பட்டது. ஓட்டமும் நடையுமாகச் சென்று காதலனை அடைந்தாள்.

தன் கண்களையே அவளால் நம்ப முடியவில்லை. மனம் வெடித்துவிடும்போல் தோன்றி யது. வெதும்பினாள்! வெந்து மடிந்தாள்! வேதனைப்பட்டாள்! காதலனின் முகத்தைக் கண்டு கண்ணீர் வடித்தாள்! கதறினாள்! அவனைக் கட்டிப் பிடித்துப் புலம்பி அழுதாள்!

அவள் கண்டது என்ன?

வலது கண்ணை இழந்து வாடிய முகத்துடன் தோன்றும் வெற்றி வீரனை! உலகம் புகழும் வீரன் நெப்போலியனையும், அவன் படைகளையும் புறமுதுகு காட்டி ஓடச்செய்து வெற்றிக்கொடி நாட்டிய வெற்றி வீரனை! அகி லத்தையே அதிரச்செய்த பெயர் பெற்ற மாவீரனை, வதைப்படுத் திய வீரமிக்கவனை! சூழ்ச்சி யின்றிஎ திரிகளைச்சூராவளிபோல் தாக்கிச் சிதைந்து ஓடச் செய்த சிங்கார ரூபனை! கையையிழந்த கண்ணியமிக்க காட்டுச் சிங் கத்தை!

காதலனைக்கண்டுகளிப்புறலாம் என்று எண்ணி இறுமாப்புடன் வந்தவள் இக் கோலத்தைக் கண் டதும் கலங்காமலா இருப்பாள்? கதறிய கதறலைக் குறிப்பிலே கூறமுடியவில்லையே என்று ஏங்க வேண்டியதாய்த்தான் இருக் கிறது!

காராசியலோவைத் தூக்கி விட்ட பின் மீண்டும் நேப்பிள் ஸைக் கைப்பற்றி 1800–ல் இங்கி லாந்துக்குத் திரும்பினான். 1801

ஆம் ஆண்டில லேடி ஹாமில்ட்டன் ஓர் ஆண் மகவை ஈன்றாள். அவன் பெயர் ஹொரோஷியோ.

அச்சமயத்தில் டென்மார்க், ஸ்வீடன், ரஷ்யா ஆகிய எல்லா நாடுகளும் ஒன்று சேர்ந்து இங்கிலாந்தை எதிர்த்தன. "ஸர்ஹைடு பார்க்கர்" என்பவருக்குத் துணையாக நெல்சன் அனுப்பப்பட்டார்.

இந்தப் போரில் டேனியர்கள் மிகவும் சாமர்த்தியமாய்ப் போர் புரிந்தனர். பிரிட்டிஷ் படைகளை நான்கு புறங்களிலும் சூழ்ந்து கொண்டனர். உதவிக்கு வழியற்ற பிரிட்டிஷ் துருப்புகள் தோல்வியுற்று வந்தன.

ஆனால் முயற்சியைக் கைவிடவில்லை. வீரர்களின் உடைந்த உள்ளங்களுக்கு ஊக்கமளித்து சிதறிய படை வீரர்களுக்கு வீரத்தை ஊட்டி, எதிர்த்து நின்றான் நெல்சன். பதுங்கிய புலி பாய்வது திண்ணம் என்பது போல் பின்னோக்கிய படைகள் வீரத்துடன் போர் புரியத் தொடங்கின. அப்போதுதான் நெல்சன் மன நிம்மதியடைந்தான். பூரிப்படைந்தான். புளகாங்கிதமுற்றான்.

வானவில்லில் தோன்றும் வர்ண ஜாலங்களைப்போல் — நிமிடத்திற்கு நிமிடம் நிறம் மாறும் பச்சோந்தியைப்போல் யுத்தம் தோன்றுவதும், தோல்வியுறுவதும், அமைதி நிலவுவதுமாக மேல்நாடுகளில் இருந்து வருவது மிகவும் சர்வ சாதாரணமாய் இருந்து வந்தது.

அதுபோல் மீண்டும் 1803-ம் ஆண்டு பிரான்சுடன் போர் துவங்கப்பட்டது இதன் காரணமாய் நெல்சனை இங்கிலாந்து போர்முனைக்கு அனுப்ப அன்றி கூவி அழைத்தது.

எதிரிகளின் கொட்டத்தை யடக்கவும் அவர்களின் சேனைகளை அழிக்கவும் திட்டமிட்டு இரு பிரிவுகளாகப் பிரிந்து அவர்களை சூழ்ந்துகொண்டனர். அச்சந்தர்ப்பத்தில் நெல்சன் தாய்நாட்டு மக்களுக்கு ஓர் அறிக்கை வெளியிட்டார்.

அதில் :—

அன்புமிக்க தோழர்களே! மாண்புமிக்க வீரர்களே! நாட்டின் நவமணிகளே! எதிரிகள் நம்மைத் தாக்குகின்றனர்! நாட்டையழித்துக் காடாக்கத்திட்டமிடுகின்றனர்! நம் வாழ்வைப் பொசுக்கி அவர்கள் வாழ நினைக்கிறார்கள்! அடிமைப்படுத்தி ஆணவத்தை நிலைநாட்டச் சமயத்தை எதிர்பார்க்கின்றனர்!

நாட்டைக் காக்க ஊக்கம் தேவை! எதிரிகளை ஒழிக்க ஒற்றுமை தேவை! போரில் வெற்றி பெற வீரர்கள் தேவை! வீரம் தேவை!

தாய்நாட்டைக் காக்கத் தயங்காமல் புறப்படுங்கள்! வெற்றியைக் காண விரைந்து வாருங்கள்! வீறுகொண்டு எழுங்கள்!

அச்சத்தை விட்டு ஆர்வத்துடன் கிளம்புங்கள்! வெற்றி நிச்சயம்! மீட்போம் தாயகத்தை! போர்க் கொடி ஏந்திப் புறப்படுங்கள்! என்று அறிவித்திருந்தார்.

இதைக்கண்ட மக்கள் நாட்டைக் காக்க ஈசல்போல் கிளம்பினர்!

எதிரிகளின் 20 கப்பல்கள் கைப்பற்றப்பட்டன. 12000 பேர் சிறைப்படுத்தப்பட்டனர். பிரஞ்சுப் படைகள் மீதியிருந்தவை தோல்வியுற்றன.

எதிரிகளின் படைகளை வென்று வருகையில்—வெற்றிக் கொடி நாட்டுகின்ற சந்தர்ப்பத்தில்—சுடர்விட்டுப் பிரகாசித்த தீபம் அணைந்தது — கடலில் தனது செல்வாக்கைப் பெருக்கி வந்த முதலே சுடப்பட்டு மடிந்தது—நாட்டைக் காக்க அரும்பாடுபட்ட வீரனின் ஆவி கூட்டைவிட்டுப் பிரிந்தது.

மேகத்திலே காரிருள் சூழ்ந்தது. உலகம் இருண்டது. மக்களின் உள்ளத்திலே சோகம் பொங்கியது. நாடே கண்ணீர் வெள்ளத்தில் மிதந்தது. ஓங்குக வீரனின் புகழ்!

—'தீச்சுடர்.'

★ ★ ★


# "ஆரம்பக்கல்வி" ஆபீஸ்

94-95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை-1.

★

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-8

ரிகார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-0

பிராவிடண்ட் பண்ட்கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-0

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத்தாள்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 1-0

வருடாந்திர பிராவிடண்ட் பண்ட் (சரிபார்த்தனுப்பும் பாரங்கள்) (ஆங்கிலம்) 100 ரூ. 2-8

(தபால் செலவு உட்பட)

ஒவ்வொன்றிலும் 25 பாரங்களுக்குக் குறையாமல் முன்பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

# தர்மபுரி தாலூகா
# ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன்

## 27—6—54-ல் நடந்தேறிய ஆசிரியர்கள் மாநாடு.

27—6—54-ல் குமாரசாமிபட்டி ஆரம்பப் பாடசாலை செங்குந்தர் நிலையத்தில் உயர்திரு M. கந்தசாமி கவுண்டர், M. L. A. அவர்கள் தலைமையில் ஆரம்ப ஆசிரியர்கள் மாநாடு காலை 10 மணி முதல் பிற்பகல் 1—மணி வரையிலும், மாலை 2–15 மணி முதல் 5—மணி வரையில் உயர்திரு T. நரசிம்ம கவுண்டர், யூனியன் தலைவர் அவர்கள் தலைமையிலும் நடந்தது.

★

## மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

1. சென்ற ஆண்டில் புதிதாய்க் கொண்டுவரப்பட்டதும், பல ஆசிரியர்கள் வேலையை இழக்கக் காரணமாய் இருந்ததும், பல்லாயிரக் கணக்கான ஏழைக் குழந்தைகளைப் பாழாக்கவிருந்ததுமான ராஜாஜி கல்வித் திட்டத்தை வாபஸ் வாங்கிய கனம் காமராஜ நாடார் அவர்களின் மந்திரி சபைக்கு இம்மாநாடு ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறது.

2. சர்வ நாச ஹைட்ரஜன் குண்டுப் பரீட்சை நடத்தியதைக் கண்டிப்பதுடன், அதைத் தடை செய்ய வேண்டுமெனப் பிரதமர் நேருவிடுத்துள்ள அறிக்கையை இம்மாநாடு வரவேற்கிறது.

3. கல்வி நிபுணர் குழுவில் (ஆரம்பக் கல்வி வளர்ச்சிக் குழு) போதிய பிரதி நிதித்துவத்தில் ஆரம்ப ஆசிரியர்களும் சேர்க்கப்பட வேண்டுமென இம்மாநாடு அரசியலாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

4. சென்னை ராஜ்ய மேல் சபைக்கு ஆரம்ப ஆசிரியர்களுக்கு ஓட்டுரிமை வழங்கப்பட வேண்டுமென மத்திய சர்க்காரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

5. ஆசிரியர்களுடைய குழந்தைகளுக்கு முதல் படிவம் முதல் 3—ம் படிவம் வரை சம்பளச் சலுகை அளித்திருப்பதைப்போலவே

காலேஜ் படிப்பு வரை சம்பளமில்லாமல் படிப்பதற்கும் சலுகை கொடுக்க வேண்டுமாய் இம்மாநாடு சென்னை சர்க்காரைக் கோருகிறது.

6. ஓய்வு பெற்ற ஆசிரியர்களின் குழந்தைகளுக்கும் ஷை சம்பளச் சலுகை கொடுக்க வேண்டுமாய் இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

7. எயிடெட் பாடசாலையில் வேலைசெய்யும் ஆசிரியர்களுக்கு 3ரூபாய்உயர்த்தியிருப்பதைப்போலலோயர் கிரேடு ஆசிரியர்களுக்கும் ஷை 3 ரூபாய் உயர்த்தப்பட வேண்டும் என கேட்டுக்கொள்கிறது.

8. ஒரே கிரேடில் உள்ள ஆசிரியர்களுக்கு வெவ்வேறு மேனேஜ்மெண்டில் மாறுபாடான சம்பளம் கொடுப்பதை ரத்து செய்து, ஒரே மாதிரியான சம்பளம் கொடுக்க வேண்டுமாய் இம்மாநாடு கோருகிறது.

9. ஹையர் கிரேடு ஆசிரியர்கள் **S.S.L.C.** பாஸ் செய்தவுடன் அவர்கள் செகண்டரி கிரேடு பரீட்சைக்கு ஆஜராகாமலேயே அவர்களை செகண்டரி கிரேடு ஆசிரியர்களாகக் கருதுவதுதான் யாயம் என இம்மாநாடு எடுத்துக் காட்டுகிறது.

10. பொதுத்தேர்தலில் ஆசிரியர் தொகுதிக்குத் தவிர பொதுத் தொகுதியில் ஆசிரியர்கள் நிற்கலாகாது என்ற ஆசிரியர்களின் உரிமையைப் பறிக்கும் உத்தரவை ரத்து செய்ய வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறது.

11. சமீபத்தில் வெளியிட்டுள்ள **G. O. M. S.** 84 **Edn. Aid** 3154 **M. E. R.** /99 **(B)** 154 ஆசிரியர்களின் அந்தஸ்தையும் சுயமரியாதையையும் மிகவும் பாதிக்கக் கூடியமுறையில் சர்டிபிகேட்டை ரத்து செய்யும் அதிகாரம் கல்வி அதிகாரிகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ளது, பிரஜா உரிமைக்கு மிகவும் பாதகமாயிருப்பதால் இப்புதிய உத்தரவை ரத்து செய்ய வேண்டுமாய் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

12. **T. S. L. C.** பரீட்சையில் தவறியவர்களுக்கு அவரவர்கள் வாங்கிய மார்க்கைத் தெரிவித்தால் குறைவான பாடத்தைப் படித்து, அடுத்த பரீட்சையில் தயார் செய்துகொள்வதற்கு வசதியாக இருக்குமாதலால் மார்க்குகளைத் தெரியப்படுத்த வேண்டுமாய் சர்க்கார் பரீட்சை அதிகாரிகளைக் கேட்டுக்கொள்கிறது.

13. **T. S. L. C.** செகண்டரி கிரேடு பரீட்சையில் **C** குரூப்பில் தவறியவர்கள் அதில் சம்பந்தப்பட்ட 3 பாடங்களுக்கும் ஆஜராக

வேண்டியிருப்பதால் எலிமெண்டரி கிரேடில் பிரித்துள்ளதைப்போல் இதையும் 2 பிரிவாகப் பிரித்து தனித்தனி எழுத அனுமதி அளிக்குமாறு கோருகிறது.

14. **E.S.L.C.** பரீட்சையில் தவறிய மாணவர்கள் எப்பாடங்களில் தவறினார்கள் என்பது அறிவிக்கப்படாததால் அப்பள்ளி ஆசிரியர்கள் மாணவர்களின் தவறிய பாடங்களில் அதிக கவனம் செலுத்தி விருத்தி அடையச் செய்ய இயலாமலிருப்பதால் தவறிய மாணவர் பெயர், தவறிய பாடங்கள் இவைகளைக் கெஜட்டில் பிரசுரிக்கக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

15. ஆசிரியர்களின் குழந்தைகளுக்கு போதனாமுறைப் பாடசாலையில் இடம் அளிப்பதில் முதல் சலுகை அளிக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்திரவிட வேண்டுமாய் இம்மாநாடு கோருகிறது.

16. 1932க்குப் பின் வேலையில் அமர்ந்த ஆசிரியர்களுக்கும் 1932க்கு முன் சேர்ந்த ஆசிரியர்களுக்கு அளிக்கப்படும் லீவு சலுகைகளைக் கொடுக்குமாறு இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

17. ஹையர் கிரேடு ஆசிரியர்கள் செகண்டரி கிரேடு தேறியதும் அவர்களை உடனடியாக ஹைஸ்கூல்களில் நியமிக்க இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

18. மத்திய சம்பளக் கமிஷன் சிபார்சுப்படி ஆரம்ப ஆசிரியர்கள் சம்பளத்தையும் உயர்த்துமாறு இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

19. ஆசிரியர்கள் சம்பளம் பெறுவதற்கு கஜானா, தபாலாபீஸ் முதலியவைகளுக்கு வரும்போது சர்க்கார் உத்தியோகஸ்தர்களுக்குக் கொடுப்பதைப்போலவே மைலேஜ் கொடுக்கவேண்டுமாய் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

20. எக்காரணத்தைக் கொண்டு மாறுதல் செய்தாலும் (கேட்டுக்கொண்டால் கூட) பிரயாணப் படியும், சேரும் காலமும் கொடுக்கப்பட வேண்டுமென ஜில்லா போர்டாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

21. இரண்டு, மூன்று ஆசிரியர்களுடன் வேலை செய்யும் தலைமை ஆசிரியர்களுக்கும் ட்யூட்டி அலவன்ஸ் **(Duty allowance)** கொடுக்க வேண்டுமாய் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

22. சம்பள உயர்வு வருஷா வருஷம் குறித்த காலத்தில் கொடுக்க வேண்டுமாய்க் கோருகிறது.

23. பிராவிடெண்ட் பண்ட் கணக்கைக் குறித்த காலத்தில் ஒவ்வொரு ஆசிரியருக்கும் தவறாமல் அனுப்புமாறு கோருகிறது.

24. P. F. கடன் தீர்ந்தவுடன் மறுபடியும் கடன் கேட்கப்பட்டால் உடனடியாகக் கொடுத்துதவுமாறு ஜில்லா போர்டாரைக் கேட்டுக்கொள்கிறது.

25. பள்ளிகளுக்குப் பாட போதனைக்கு ஏற்ற உபகாரங்களும், ஸ்டேஷனரி சாமான்களும் ஜில்லா போர்டிலிருந்து சப்ளை செய்யுமாறு இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

26. காலா காலத்தில் அந்தந்தப் பள்ளிகளுக்குப் போதுமான ஆசிரியர்களை நியமிக்க் வேண்டுமாய் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

27. பள்ளிக்கூடத்திற்கு வைக்கும் பாட புத்தகங்கள் சம்பந்தமாக ஆசிரியர்களின் பிரதிநிதிகளைப் புத்தகக் கமிட்டியில் சேர்த்துக் கொள்ள வேண்டுமாய் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

28. ஆசிரியைகளுக்கு 3 மாத சம்பளத்துடன் பிரசவ லீவு கொடுக்க வேண்டுமாய் இம்மாநாடு கோருகிறது.

29. நீண்ட காலமாக அசிஸ்டெண்டு இன்சார்ஜாக இருப்பவர்களைத் தலைமை ஆசிரியராக மாற்றுமாறு அல்லது உடனடியாக தலைமை ஆசிரியர் ஒருவரை நியமிக்குமாறு இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

30. தலைமை ஆசிரியர்கள் உதவிகளுக்கு வருடா வருடம் வகுப்புக் கொடுக்கும்போது அனுபவம் சர்வீஸ் முதலியவைகளைக் கவனித்து மேல் வகுப்புக் கொடுக்க வேண்டுமெனத் தலைமை ஆசிரியர்களுக்கு உத்திரவிட வேண்டுமாய் இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

31. ஹையர் கிரேடு ஆசிரியர்கள் செகண்டரி கிரேடு தேறிய தேதியிலிருந்து அந்த கிரேடு சம்பளம் அளிக்குமாறு இம்மாநாடு கோருகிறது.

32. காயம் செய்யப்படாமலிருக்கும் ஆசிரியர்கள் வருஷ மத்தியில் லீவு கொடுத்தால் அந்தக் காலங்களுக்குச் சம்பளமில்லாத லீவு கிடைக்கிறதின் காரணமாக அவ்வருஷத்திய (வெக்கேஷன் பே) 6 மாதத்திற்குக் குறைவாக இருந்தாலும் வேலை செய்த நாட்களுக்கு விகிதாச்சாரச் சம்பளமும் D. A. வும் கொடுக்குமாறு இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

33. 2—9—51க்குப் பின் சேர்ந்த ஆசிரியர்களை இரண்டு வருஷம் பூர்த்தியாயும் காயம் செய்யப்படாமலிருப்பதால் அவர்களை உடனடியாகக் காயம் செய்யுமாறு இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

34. ஒவ்வொரு பள்ளிக்கூடத்திற்கும் 25 பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் வீதம் நியமனம் செய்யுமாறு இம்மாநாடு கோருகிறது.

35. தர்மபுரி வட்ட ஆரம்ப ஆசிரியர் யூனியனை அகில உலக ஆசிரியர்களின் யூனியனில் இணைத்துக்கொள்ளலாமென இம்மாநாடு தீர்மானிக்கிறது.

36. ஜில்லா போர்டு ஆசிரியர்களுக்குக் கொடுப்பதைப் போல சம்பள விகிதம், சம்பள உயர்வு, லீவு வசதி முதலியவைகளைப் பஞ்சாயத் போர்டு ஆசிரியர்களுக்கும் கொடுக்க வேண்டுமென சென்னை லோகல் போர்டு இன்ஸ்பெக்டரவர்களை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

37. தர்மபுரி இத்தாலூக்காவின் தலைமை இடமாயிருப்பதாலும் அடிக்கடி வெளியூர் ஆசிரியர்கள் இங்கு வந்து தங்கவேண்டியிருப்பதாலும் இத்தாலூக்காவிலுள்ள சுமார் 500 ஆசிரியர்களின் சௌகரியத்தை உத்தேசித்து தர்மபுரியில் ஆரம்ப ஆசிரியர்கள் யூனியன் சார்பில் ஒரு கட்டிடம் அமைக்கலாமாகவும் ஷை கட்டிடம் அமைக்க தர்மபுரி (**Highways Engineer's Office**) க்கு வடபுறம் உள்ளதும் தர்மபுரி பஞ்சாயத் போர்டுக்குச் சொந்தமானதுமான காலியிடத்தைத் தர்மபுரி தாலூகா ஆரம்ப ஆசிரியர்கள் யூனியனுக்குக் கொடுத்துதவ வேண்டுமாய் தர்மபுரி பஞ்சாயத் போர்டாரை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

38. தர்மபுரி தாலூக்கா ஆரம்ப ஆசிரியர்களின் யூனியனை சேலம் ஜில்லா ஆரம்ப ஆசிரியர்களின் யூனியனில் இணைத்துக் கொள்ளலாமென இம்மாநாடு தீர்மானிக்கிறது.

39. தீர்மானம் 35, 37, 38ல் கண்ட விஷயங்களுக்குத் தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள யூனியன் தலைவருக்கும் செயலாளருக்கும் பூரண அதிகாரம் கொடுக்கலாமாக இம்மாநாடு தீர்மானிக்கிறது.

40. மாரண்டஹள்ளி, பாலக்கோடு, பாப்பாரப்பட்டி சென்டர்களில் மாநாட்டிற்கு நன்கொடையளித்த அன்பர்களுக்கு எங்களது அன்பு நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

**(Sd.) M. கந்தசாமி கவுண்டர், M. L. A.**
மாநாட்டுத் தலைவர்.

தருமபுரி
15—8—54

**T. நரசிம்ம கவுண்டர்,**
யூனியன் தலைவர்.

**G. K. சிங்காரவேலு நாயுடு,**
யூனியன் செயலாளர்.

# செய்திச் சுருள்

## விடுதலை விழா

பிரஞ்சுக்காரர்களின் ஆதிக்கத்தில் இருந்த புதுச்சேரி, காரைக்கால், மாஹி, ஏனம் ஆகிய நான்கு பகுதிகளிலிருந்தும் பிரஞ்சு ஏகாதிபத்யம் நவம்பர் முதல் தேதியன்று வெளியேறி விட்டது. அன்றைய தினம் காலை, புதுச்சேரியில், மிஸ்டர் பியரி லாண்டி என்னும் பிரஞ்சு அதிகாரி, தன் நாட்டு அரசாங்கத்தின் சார்பில், விடுதலைப் பத்திரத்தில் கையெழுத்திட்டு, அதனை இந்திய அரசாங்கத்திடம் ஒப்படைத்தார். அன்றைய மாலையே, தயாராகக் காத்திருந்த கப்பல் ஒன்றின் மூலம், பிரஞ்சு அதிகாரிகள் அனைவரும் தங்கள் நாட்டுக்குத் திரும்பிவிட்டனர். அந்த நேரத்தில், இந்தியாவின் பல பகுதிகளிலும், பிரஞ்சு ஆதிக்கம இந்தியாவைவிட்டு விலகிய நற்செய்தியை முன்னிட்டு விடுதலை விழா, விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

## போட்டா போட்டி !

மக்கள் தொகைப் பெருக்கத்தில் இந்தியாவும் சீனுவும் ஒன்றை ஒன்று மிஞ்சிடும் வகையில் நிலைமை வளர்ந்து வருகிறது. 1951ம் ஆண்டில் எடுக்கப்பட்ட குடி மதிப்புக் கணக்கின்படி இந்தியாவின் மக்கள் தொகை 36 கோடி ஆகும். ஆனால் இந்த ஆண்டில் எடுக்கப்பட்ட குடி மதிப்புக் கணக்கின்படி, சீன நாட்டின் மக்கள் தொகையோ 57 கோடியே 42 லட்சம் ஆகும். உலகத்திலேயே மிக அதிகமான மக்கள் தொகையைக் கொண்ட நாடு சீனுதான். அதற்கு அடுத்தபடியாக அதிகத் தொகை உடைய நாடு, இந்தியா.

## சுற்றுப் பயணம்

இந்தியாவின் முதலமைச்சர் பண்டித நேரு, அக்டோபர் 20 முதல் நவம்பர் 2 வரை, 13 நாட்கள், கீழ்த்திசை நாடுகள் சிலவற்றில் சுற்றுப் பயணம் செய்துவிட்டுத் திரும்பியிருக்கிறார். சீனுவுக்குச் சென்று, அந் நாட்டின் தலைவர் மா சே துங், முதலமைச்சர் சோ என் லாய், துணைத் தலைவர் சூடே முதலிய பலரையும் பேட்டி கண்டு, இருநாட்டுப் பிரச்சினைகளையும்பற்றி உரையாடினார். வியட்நாம், வியட்மின் ஆகிய இரு நாடுகளுக்கும் சென்று, அந் நாட்டின் தலைவர்களிடமும் பல பொருள்கள் பற்றிக் கலந்து பேசினார். கம்போடியா, லாவோஸ் முதலிய வேறு பல நாடுகளிலும் சில நாட்கள் தங்கினார். திரும்பி வரும்போது, பர்மாவில் சிறிது நேரம் தங்கி, அந் நாட்டின் முதல்வர் தக்கின் நூ அவர்களுடன் உரையாடினார். பண்டித நேருவின் சீன நாட்டு விஜயம், அகில உலக அரசியலில் மிகவும் முக்கியமான

ஒரு நிகழ்ச்சி என்று கருதப்படுகிறது.

## இரண்டாவது திட்டம்

இந்தியாவின் பொருளாதார நிலையை முன்னேற்றமடையச் செய்வதற்காக, இந்திய அரசாங்கத்தால் ஐந்தாண்டுத் திட்டம் வகுக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகிறதல்லவா? இப்போது, அடுத்த 5 ஆண்டுகளுக்கான இரண்டாவது திட்டமும் வகுக்கப்பட்டு விட்டதாம். இதன் மொத்த செலவு அளவு, ஏறத்தாழ 5500 கோடி ரூபாயாக இருக்குமாம். இதில், சுமார் 3000 கோடி ரூபாய் அரசாங்கங்களாலும், மிச்சத் தொகை, தனிப்பட்ட முதலாளிகளாலும் எழுப்பப்படுமாம். இரண்டாவது திட்டத்தைப்பற்றிய தெளிவான விவரங்கள் விரைவில் கிடைக்கும் என்று நம்பப்படுகிறது.

## ஆவடியில், மாநாடு !

வருகிற ஜனவரி மாதத்தில், சென்னைக்கு அடுத்துள்ள ஆவடியில், அனைத்திந்திய காங்கிரஸ் மாநாடு நடைபெற இருக்கிறதாம். 23 ஆண்டுகளுக்குப் பிறகு இப்போதுதான் முதன்முறையாகத் தமிழ் நாட்டில் அனைத்திந்திய காங்கிரஸ் மாநாடு நடைபெற இருக்கிறது.

## கல்வி வாரம்

நவம்பர் முதல் வாரம், தென்னிந்தியாவில், கல்வி வாரமாகக் கொண்டாடப்பட்டது. நாட்டின் பல பகுதிகளிலும் கல்வி விழாக்களும், கூட்டங்களும் நடைபெற்றிருக்கின்றன. அமைச்சர்கள், ஆசிரியர்கள், கல்வி நிபுணர்கள் ஆகியவர்கள் இந்தக் கூட்டங்களில் பங்கெடுத்துக் கொண்டனர். ஆசிரியர்களின் பொருளாதார நிலையை உயர்த்த வேண்டிய தன் அவசியம், இந்தக் கூட்டங்களில் வற்புறுத்தப்பட்டது. கல்வித் துறையில் எத்தகைய சீர்திருத்தங்கள் தேவை என்பது பற்றியும், என்னென்ன ஏற்பாடுகளை மேற்கொண்டால் கல்வித் துறையில் முன்னேற்றம் கிட்டும் என்பது பற்றியும், இக் கூட்டங்களில் விவாதங்கள் நிகழ்த்தப்பட்டன.

## மழை வேண்டுமா மழை ?

செயற்கை முறையில் மழையை வரவழைப்பது நம் நாட்டில் சாத்தியமா என்பதைப்பற்றிய ஆராய்ச்சி செய்வதற்கான சில ஏற்பாடுகள் சென்னை அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எஞ்சினியர்களையும் விஞ்ஞானிகளையும் கொண்ட ஒரு சிறு குழு இதற்காக நிறுவப்படுமென்றும், அந்தக் குழுவின் அறிக்கை சாதகமானதாக இருந்தால், அடுத்த மாதத்தில், செயற்கை மழை சம்பந்தமான முயற்சிகள் தொடங்கப்படுமென்றும் செய்தித் தாள்கள் தெரிவிக்கின்றன.

## அவர், வருகிறார்

ஐரோப்பாவில் உள்ள யூகோஸ்லாவியாவின் தலைவர் மார்ஷல் டிட்டோ, அடுத்த

இரண்டு மாத காலத்திற்குள் இந்தியாவுக்கு வர இருக்கிறார். ரஷ்ய நாட்டின் தொடர்பு இல்லாமல், ஆனால் அதே சமயம் கம்யூனிஸ்ட் முறையில் அரசாங்கத்தையும் பொருளாதார அமைப்பையும் கொண்டிருக்கும் ஒரே ஒரு நாடு, யூகோஸ்லாவியா. அந்த நாடும், முதலில், ரஷ்ய நாட்டின் தொடர்புடன்தான் இருந்தது. ஆனால் பிறகு, அந்த நாட்டின் தனிப்பெருந் தலைவர் தளபதி டிட்டோவுக்கும், ரஷ்ய நாட்டின் முதல்வர் தளபதி ஸ்டாலினுக்குமிடையே ஏற்பட்ட தகராறுகள் காரணமாக, அந் நாடு, தனக்கென்று தனிப்போக்குடைய கம்யூனிஸ்ட் நாடாகிவிட்டது. இப்படிப்பட்ட நாட்டின் தலைவரைக் காணவும், அவர் உரையைக் கேட்கவும் நம் நாட்டவர் விரும்புவது இயற்கைதானே? எனவேதான், தளபதி டிட்டோவின் வருகை, தனிச் சிறப்புடையதாகக் கருதப்படுகிறது.

## மந்திரிசபை கவிழ்ந்தது!

1953ம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் நாளன்று ஆந்திர மாநிலம் தனியாக நிறுவப்பட்டது முதல், ஆந்திர கேசரி பிரகாசம் அவர்களை முதலமைச்சராகக் கொண்ட காங்கிரஸ் மந்திரி சபை, அந்த மாநிலத்தை ஆண்டு வருகிறதல்லவா? அந்த மந்திரி சபைமீது தனக்கு நம்பிக்கையில்லை என்று, ஆந்திர சட்டசபை, நவம்பர் 6ம் நாளன்று தீர்மானம் நிறைவேற்றிவிட்டது. சில மாதங்களுக்கு முன்பு, ஆந்திர அரசாங்கத்தால் நிறுவப்பட்ட மதுவிலக்கு ஆராய்ச்சிக் குழுவினர், மதுவிலக்குத் திட்டத்தை உடனடியாக ரத்து செய்துவிட வேண்டுமென்றும், அந்தத் திட்டத்தால் நன்மையைவிடத் தீமையே அதிகம் ஏற்படுகிறதென்றும் தெளிவாகத் தெரிவித்திருந்தனர். அந்தக் குழுவினர் தீர்ப்பை அப்படியே ஏற்றுக் கொண்டு, நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று, ஆந்திர சட்டசபையும் ஒரு தீர்மானம் நிறைவேற்றிற்று. ஆனால் ஆந்திர அரசாங்கத்தை நடத்திவந்த காங்கிரஸ் மந்திரி சபை, சட்டசபையின் கருத்தை ஏற்று, அதன்படி மதுவிலக்குத் திட்டத்தைச் ரத்துசெய்யவில்லை. எனவேதான், இப்போது, மந்திரி சபைமீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது. நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேறிய மறுநாளே மந்திரிசபை ராஜினாமா செய்துவிட்டது. விரைவில், ஆந்திராவில், பொதுத் தேர்தல் நடைபெறுமென்று தெரிகிறது. நவம்பர் 15 முதல் ஆந்திராவில் கவர்னராட்சி ஏற்பட்டிருக்கிறது.

## திருமணம்—74 வயதில்!

திருவாங்கூரில் உள்ள புதுப்பள்ளி என்னும் ஊரில், 1-11-54 அன்று, தேரியன் ஐசக் என்னும் 74 வயது நிரம்பிய முதியவர், சோசம்மா என்னும் 73

வயது நிரம்பிய மூதாட்டியைத் திருமணம் செய்துகொண்டார். மணமகனுக்கு, சில ஆண்டுகளுக்குமுன் இறந்துபோன அவருடைய முதல் மனைவிமூலம், இரண்டு ஆண் பிள்ளைகளும் நான்கு பெண் பிள்ளைகளும், 40 பேரன் பேத்திகளும் இருக்கின்றனராம். அதுபோலவே மணமகளுக்கும், பல ஆண்டுகளுக்கு முன் மாண்டுபோன அவருடைய முதல் கணவன் மூலம் பிறந்த பல பிள்ளைகளும் பேரன் பேத்திகளும் இருக்கின்றனராம். அந்த அம்மையாரின் மூத்த மகனின் வயது 52 ஆம்! இத்தகு தம்பதிகளுக்குத் திருமணம்—அந்தத் திருமணப் போட்டோ எடுத்தது யார் தெரியுமோ? இவர்களுக்குப் பிறந்த சில பேரப் பிள்ளைகளேதான்! எப்படி இந்தத் திருமணம்?

## அடுத்த தலைவர் யார்?

இந்தக் கேள்வி, அனைத்திந்திய காங்கிரஸ் வட்டாரத்தில், இப்போது, பலராலும் கேட்கப்படும் நிலைமை பிறந்துவிட்டது: பண்டித நேருவே, இதுவரை, இந்தியாவின் பிரதமராகவும், அதே சமயம், காங்கிரசின் தலைவராகவும் இருந்து வருகிறார். ஆனால் அடுத்த ஆண்டும் அவரே காங்கிரசின் தலைவராக இருப்பதை அவர் விரும்பவில்லை என்று அவரே தெரிவித்து விட்டார். எனவேதான் அடுத்த தலைவர் யார் என்கிற கேள்வி முக்கியமானதாகிவிட்டது. சௌராஷ்டிர மாநிலத்தின் முதலமைச்சராக இருந்துவரும், உச்சரங்ராய் நவல்ஷங்கர் தபேர் என்பவரை அந்தப் பொறுப்பில் அமர்த்தினால் நல்லது என்று காங்கிரஸ் காரியக் கமிட்டி கருத்தறிவித்திருக்கிறது. தபேர், தலைவராவாரா? அல்லது அன்பர் ராஜகோபாலாச்சாரியாரிடம் அந்தப் பொறுப்பு ஒப்படைக்கப்படுமா? ஜனவரி முடிவதற்குள் முடிவு பிறந்துவிடும்.

## மரணம்

இந்திய அரசாங்கத்தின் உணவு அமைச்சர் திரு ரபி அகமத் கித்வாய், 24–10–54 ஞாயிறன்று இரவு, மாரடைப்பால் மரணமடைந்தார். 1894ல் பிறந்த திரு கித்வாய், அலகாபாத் பல்கலைக் கழகத்தில் பயின்றவர். 1922 முதல் 1926 வரையில் ஒருமுறையும், 1936ல் ஒரு முறையும் உத்தரப் பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் தலைவராக இருந்தார். 1922ம் ஆண்டில் தொடங்கப்பட்ட சட்ட மறுப்பு இயக்கத்தின்போது ஓராண்டு காலம் சிறை வாழ்வு அநுபவித்தார். 1940 ல் நடத்தப்பட்ட தனிப்பட்டவர்கள் சத்யாக்ரகத்திலும், 1942ல் நிகழ்ந்த ஆகஸ்டு போராட்டத்திலும் கலந்துகொண்டு, மீண்டும் இருமுறை சிறை புகுந்தார். 1937 லும் 1946 லும் உத்தரப் பிரதேச நிலவரி அமைச்சராகப் பணி புரிந்தார். 1947ல் மத்திய அரசாங்க அமைச்சரானார்.

**உங்களுக்குத் தெரியுமா ?**

1952—53ம் ஆண்டில், சென்னை நகராட்சி மன்றத்தால் நடத்தப்பட்டு வரும் ஆரம்பப் பாடசாலைகளின் எண்ணிக்கை 258.

இவற்றில், வாடகைக் கட்டிடங்களில் நடத்தப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கை 101.

இந்தப் பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகளின் மொத்த எண்ணிக்கை, 79,011.

இவர்களில், நண்பகல் உணவை இலவசமாகப் பெறுபவர்களின் தொகை, 11,293.

சென்னை நகரத்தில், ஆரம்பப் பள்ளிகளில் படிக்க வேண்டிய வயதுடைய பிள்ளைகளின் தொகை, 1,25,284.

இவர்களில், பள்ளிகளில் சேர்ந்து படிப்பவர்களின் சதவிகிதம் 87.

---

## அறிஞரின் தேன் துளிகள்

அன்பைப் பெருக்குவதன் மூலமாய்த்தான் மாநிலத்தில் இன்பத்தைப் பெருக்குவது முடியும்.

— ராபின்.

உனது கடமையின் மேன்மையை நீ எப்போது உணர்கின்றாயோ அப்போதுதான் நீ வாழ ஆரம்பிக்கின்றாய்.

— எட்வி.

வாக்குக் கொடுப்பதற்கு மெதுவாகவும் அதனை நிறைவேற்றுவதற்குத் துரிதமாகவும் இரு.

— லிங்கன்.

கயவனைப் பக்தனாக்கவும், பக்தனைக் கயவனாக்கவும் நூல்களே பெரிதும் காரணமாயிருக்கின்றன.

— யங்.

சொன்ன சொல் தவறாதவன் தேவர்களுக்கு ஒப்பானவன்; அவனை பலர்ப் அண்டிக்கொண்டிருப்பார்கள்.

— எட்வி.

சேமமுற வேண்டுமெனில்
தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச்செய்வீர்—*பாரதியார்.*

# *மாணவர் மன்றம்*

**(துவக்கம்—1931)**

---

(*பதிவு செய்யப்பட்டது.* **Act. XXI of** 1860. **S. No.** 52 **of** 1952)

17, *இரத்தின முதலி தெரு, சென்னை* – 1.

---

**தமிழ்ப்பணி போற்றும் தகைமை உடையீர்,**

**வணக்கமும் வாழ்த்தும் பலப்பல.**

*ஏறக்குறையக் கால் நூற்றாண்டாகச் சென்னை மாணவர் மன்றம், மாணவர்களின் மொழிவளமும் கலைநலமும் பெருகப் பணியாற்றி வருவதைத் தங்கள் திருவுள்ளம் அறியும். சென்னை மாநிலமேயன்றி இலங்கை, மலேயா போன்ற கடல் கடந்த நாடுகளிலும் இன்று மன்றத்தின் தமிழ் மணம் பரவி வருகிறது. மன்றத்தின் பலதிறத் தொண்டுகளைக் கண்ட கல்வித்துறைத் தலைவர்களும், அரசியல் தலைவர்களும், ஆசிரியர்களும், பெற்றோர்களும், மாணவர்களும் பெரிதும் பாராட்டி எங்களுக்கு ஊக்கமூட்டி வருகின்றனர். பள்ளிக்குச் செல்லாத பாப்பாக்கள் முதல் கல்லூரி இறுதி வகுப்பிற்* **(B. A.)** *பயிலும் மாணவர்கள் வரை, எங்கள் மாணவர் மன்றச் சார்பில் ஆண்டுதோறும் நடைபெறும் பாடல், கதை, கட்டுரை, கவிதை, கையெழுத்து, ஓவியம், தமிழ்த்தேர்வு போன்ற போட்டிகளில்* (30,000-*க்கு மேற்பட்ட மாணவர்கள்*) *பெரும் பங்கு கொண்டு, தங்கப் பதக்கங்கள், வெள்ளிப் பதக்கங்கள், பணமுடிப்புகள், புத்தகங்கள், நன்மதிப்பிதழ்கள் போன்ற பரிசுகள் பெற்றுப் பயனடைகின்றனர்.*

*இந்நாளில் எங்கள் மன்றம் பதிவு செய்யப்பட்ட ஒரு பேரமைப்பாக விளங்கி வருகிறது. இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழினையும் வளர்த்துத் தமிழ், தமிழ்நாடு, தமிழர் முன்னேற்றம் கருதி உழைத்தலையே இம்மன்றம் முதல் நோக்கமாகக் கொண்டு விளங்குகின்றது. கல்வி வறுமையைப் போக்குதற்கு நூல்நிலையமும் ஒரு சிறந்த கருவியன்றோ? அதனால், மாணவர்கட்கும் பொதுமக்கட்கும் பயன்படக் கூடிய வகையில் சிறந்ததொரு நூல்நிலையம் நிறுவுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டு வருகின்றன. சிறந்த தமிழ்ச் செல்வங்களாக விளக்கும் நம் அரும்பெரும் தமிழ்நூல்களைப் பலருக்*

கும் பயன்படக் கூடியவகையில் நல்ல வெளியீடுகளாக வெளியிட்டு வருகிறோம். இவ்வகையில் இதுவரையில் 10 நூல்களுக்குமேல் மாணவர் மன்ற வெளியீடுகளாக வெளியிடப்பட்டுள்ளன. இவையே யன்றி மாணவர்களுக்குச் சிறந்த இலக்கிய உணர்ச்சியை அளிக்கும் நோக்கத்தோடு **தமிழ் மாணவன்** என்னும் திங்கள் இதழ் ஒன்றும் துவக்க முயன்று வருகின்றோம்.

மேலும் மன்றத்தின் சார்பில் பொது மக்கட்குப் பயன்படும் வாசகசாலை, எழுத்தறிவற்ற முதியவர்க்குக் கல்வி கற்பிக்கும் முதியோர் கல்விச்சாலை, தமிழின் சுவையை அனைவரும் நுகர்ந்து இன்புறத் தக்க தமிழ் வகுப்புக்கள், மாணவர் தம் சொல்லாற்றலை வளர்க்க வாரக் கூட்டங்கள் அனைத்தையும் சிறப்புற நடத்தித் தமிழுக்கும் தமிழ் நாட்டிற்கும் தொண்டு செய்ய வேண்டும் என்பதே மன்றத்தின் குறிக்கோளாகும்.

**'முனிவரும் முன்னுவ பொரன்ஞல் முடியும்'** அன்றோ? மேற் கூறிய பெருஞ்செயல்கள் அனைத்தும் தங்களைப்போன்ற அருள் உள்ளம் படைத்த அன்பர்களின் பொருளுதவியால் இனிது நடைபெற்று வருகின்றன. மன்றத்திற்கு இத்தனை ஆண்டுகளாக வேறு எத்தகைய ஆதரவும் இல்லை. நிலையான நிதியும் இன்றித் தனியான இடமும் இன்றி இவ்வளவு அரிய செயல்களை மன்ற ஆதரவாளர்களாலும் அன்பர்களாலும் ஆற்றிவருகிறோம். மன்றத்தின் இன்றைய பெரும் வளர்ச்சிக்கு ஒரு சொந்தமான கட்டடமும் நிலையான நிதியும் மிக மிக இன்றியமையாது வேண்டப்படுவனவாகும். இட வசதி இல்லாத குறையினலேயே மன்றம் மேற்கூறிய பல துறைகளிலும் பணியாற்ற வாய்ப்பிருந்தும் இயலாத நிலையில் உள்ளது. மன்றத்திற்கெனத் தனியான நிலையம் அமைத்தற்குரிய நிலம் பெறும் முயற்சியில் மிகப் பெரிதும் முயன்று வருகிறோம். அம் முயற்சி வெற்றிபெறும் என்று நம்புகிறோம். நிலம் கிடைத்தாலும் மன்ற நிலையக் கட்டடத்திற்கெனப் பெருந் தொகை தேவைப்படுமென்று அறிகிறோம். இந்நிலையில் மன்றப் பணிகளைத் தொடர்ந்து நடத்துவதற்கும், மன்றத்தை நிலையான அமைப்பாக இயங்கச் செய்வதற்குரிய பெரும் நிதியை வளர்ப்பதற்கும், **வெள்ளி விழா** ஆண்டாகிய அடுத்த ஆண்டிலேனும் மன்றத்திற்கெனத் தனிக்கட்டடமொன்று அமைப்பதற்கும் தங்கள் ஆதரவைப் பெரிதும் எதிர்பார்க்கிறோம். தாங்கள் மனமுவந்து ஈயும் சிறு தொகையும் ஒரு பாப் பாவுக்குப் பரிசாகவும் மன்றக் கட்டடத்தின் சிறு கல்லாகவும் உதவக்கூடும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

அருள்கூர்ந்து தங்களாலியன்ற பொருளுதவி புரியுமாறு வேண்டு கின்றோம்.

வெளியூரிலிருக்கும் மன்ற உறுப்பினர்கள் தம்மூரில் அருள் உள்ளம் வாய்ந்த செல்வரை அடுத்து, மன்றத்தின் ஆக்கவேலைகளை விளக்கிக் கூறிப் பொருளுதவி புரியுமாறு செய்துதவ வேண்டுகின்றோம். தமிழ்ச்செல்வர்களின் இல்லங்களிலும், உறுப்பினர்கள் இல்லங்களிலும் நடைபெறும் திருமணங்கள் போன்ற சிறப்பு நிகழ்ச்சிகளிலும் மன்றவளர்ச்சி குறித்து நன்கொடைகள் அனுப்பியுதவின் நலமாக இருக்கும்.

மன்றத்தின் இருபத்திமூன்றாம் ஆண்டு நிறைவு விழாவை, வரும் டிசம்பர் மாத இறுதியில் நடத்தலாம் என்று முடிவு செய்துள்ளோம். தமிழ்நாட்டுப் பேரறிஞர் ஒருவர் தலைமையல் மன்றத்தின் சார்பில் நடைபெற்ற பல திறப்போட்டிகளிலும் வெற்றிபெற்ற மாணவ மாணவியர்க்கும் குழந்தைகளுக்கும் பரிசுகள் வழங்கப் பெறும். தாங்கள் ஆண்டுவிழா நிகழ்ச்சிக்கும் பரிசுவழங்குவதற்கு மாகத் தங்களாலியன்ற பொருளுதவி புரிந்து விழாவினைச் சிறப்புற நடத்த உதவிபுரிய வேண்டுகின்றோம். வழக்கம்போல் ஆண்டு தோறும் பொருளுதவி புரிந்தும், பரிசுகள் வழங்கியும், எங்கள் தொண்டுகளுக்குத் துணைபுரியும் அன்பர்கட்கும் அறிஞர்கட்கும் எங்கள் பணிவார்ந்த நன்றி. அத்தகைய உதவிகளைத் தொடர்ந்து இவ்வாண்டிலும் புரிந்தருள வேண்டுகின்றோம்.

ஆண்டு நிறைவு விழாவினைப் பற்றிய அறிக்கை விரைவில் வெளிவரும்.

**நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்!**
**நிதி குறைந்தவர் காசுகள் நல்கீர்!**
**அதுவு மற்றவர் வாய்ச்சொல் அருளீர்!**
**ஆண்மை யாளர் உழைப்பினை நல்கீர்!**

இங்ஙனம்

தங்கள் நன்றிமறவாத,

**எஸ். தருமாம்பாள்,**

தலைவர், மாணவர் மன்றம்.

# பள்ளியில் பகலுணவு

★

அமெரிக்க மக்கள் பெரும் பாலோர் நாட்டுப் புறங்களில் வாழ்ந்த காலத்தில் நாடெங்கும் ஒரு அறையுள்ள பாடசாலைகளே இருந்தன. பிள்ளைகள் பள்ளிக் கூடத்துக்குப் போகும்போது தங்கள் பகல் உணவையும் கையோடு கொண்டு போனார்கள்.

இன்று ஊருக்கு ஊர் அந்த கைய சிறிய பாடசாலைகள் இல்லை; அவற்றிற்குப் பதிலாகச் சிறிய பாடசாலைகள் பலவற்றில் படித்த பிள்ளைகள் எல்லாரும் ஒரே இடத்தில் படிக்கக்கூடிய பெரிய பாடசாலைகள் தோன் றின. அந்தப் பாடசாலைகளில் பெரிய கட்டிடங்களும், ஒரு அறைப் பாடசாலைகளில் இல்லாத படிப்பு வசதிகளும் உள்ளன. மோட்டார் வாகனங்களில் பிரயா ணம் செய்யும் வசதி ஏற்பட்ட தால் தான் இவ்வாறு பல சிறு பாடசாலைகளில் படித்த பிள்ளை களை ஒரே பெரிய பாடசாலையில் சேர்க்கக் கூடியதாயிற்று.

இவ்வாறு பெரிய பாடசாலை கள் ஏற்படவே, பிள்ளைகளுக்கு நல்ல உணவு கொடுக்கும் முறை யும் ஏற்படுவதாயிற்று. பாட சாலைப் பிள்ளைகளுக்குப் பகல் உணவளிக்கும் தேசியத் திட்டம் ஒன்று அமைக்கப்பட்டது: எனவே, இப்பொழுது பிள்ளை கள் வீடுகளிலிருந்து பகல் உணவு கொண்டு போய்ப் பள்ளிக்கூடத் திலாவது அதற்கு வெளியே யாவது இருந்து, குளிர்ந்து போன உணவை உண்ண வேண் டியதில்லை. அமெரிக்கப் பள்ளிக் கூடங்களில் பகல் உணவு கொடுக் கப்படுகிறது. அது நல்ல முறை யில் அவர்களுக்குப் பரிமாறப்படு கிறது. இறைச்சி, காய்கறி, பால் முதலியவை பகல் உணவாகக் கொடுக்கப்படுகின்றன.

விவசாயப் பொருளில் மிஞ்சி யதில் ஒரு பகுதியை உபயோகிப் பதற்கு இத்திட்டம் ஒரு வழி செய்கிறது.

1930–க்கும் 1940–க்கும் இடையில் பள்ளிக்கூடத்துப் பகல் உணவுத் திட்டம் விருத்தி யடைந்தது. அந்தப் பத்தாண்டு களில் குறைந்த சம்பளம் கிடைத் தது. வாணிப வருவாயும் குறைந்து போயிற்று;தேவைக்கு அதிகமான உணவுப்பொருள்கள் பண்ணைகளில் உற்பத்தியாயின. பள்ளிக்கூடத்துப் பிள்ளைகளுக்கு உணவு அளிக்கும் பொருட்டு, அரசாங்கம் உணவுப் பொருள் களை வாங்குமானால், விவசாயிக் கும் பொதுவான பொருளா தாரத்திற்கும் அதனால் நலன் விளையும் என்று சொல்லப் பட்டது.

ஏற்கனவே மத்திய அரசாங் கம் நேரே உணவு கொடுத்தது

மல்லாமல், ராஜ்ய அரசாங்கங்கள் உணவுப் பொருள்கள் வாங்கிக் கொடுப்பதற்கு அவற்றிற்கு 1944–ல் முதன் முறையாகப் பணமும் கொடுத்தது.

பகல் உணவுத் திட்டம் மிகச் செம்மையாய் நடைபெற்றது. எனவே, அதற்கு அநுகூலமாக அமெரிக்கக் காங்கிரஸ் 1946–ல் பள்ளிக்கூடத்துப் பகல் உணவுச் சட்டம் ஒன்று நிறைவேற்றி, இத்திட்டம் நிலையாக நடைபெறும் நிலையை ஏற்படுத்தியது.

இப்பொழுது இத்திட்டத்தின்படி 57,000 பள்ளிக்கூடங்களில் உள்ள ஒரு கோடிப் பிள்ளைகள் மிகக் குறைந்த விலை கொடுத்து, நல்ல சத்துள்ள உணவு உண்கிறார்கள்.

1952–1953 பள்ளிக்கூட வருஷத்தில் அமெரிக்க விவசாய இலாகா மிச்சமான பல்வகை உணவுப் பொருள்களை இந்தக் காரியத்திற்கு வழங்கியது. 3,90,00,000 ராத்தல் வான் கோழி இறைச்சியும், 2,10,00,000 ராத்தல் பன்றி இறைச்சியும், 6 கோடி முட்டைகளும், 1,40,00,000 ராத்தல் வெண்ணெயும், 1,10,00,000 ராத்தல் பால் பவுடரும் மத்திய அரசாங்கத்து விவசாய இலாகா கொடுத்திருக்கிறது. ஆரஞ்சு, ஆப்பிள் முதலிய பழவகைகளையும் அரசாங்கம் கொடுத்திருக்கிறது.

இவையேயன்றி, ராஜ்யங்கள் பள்ளிக்கூடத்துப் பகல் உணவுக்காக வாங்கும் உணவுப் பொருள்களின் விலையில் நான்கில் ஒரு பங்கையும் மத்திய அரசாங்கம் கொடுக்கிறது. மற்ற முக்காற் பங்கை ராஜ்ய அரசாங்கங்களும், ஸ்தல ஸ்தாபனங்களும், அந்தந்த இடத்திலுள்ள சங்கங்களும் கொடுக்கின்றன; பெற்றோர்களும் கொடுக்கிறார்கள்.

இப்பொழுது மிஞ்சியுள்ள இறைச்சி, வெண்ணெய், பால் பவுடர், பாற்கட்டி, தேன், ஒலிவ எண்ணெய் முதலியவற்றை மத்திய அரசாங்கம் கொடுக்கிறது.

ராஜ்யக் கல்வி அதிகாரிகள் இத்திட்டத்தை நடத்தி வைக்கிறார்கள். அமெரிக்க விவசாய இலாகா நிபுணர்கள் திட்டத்தை அமைத்து, அதனை மேற்பார்க்கிறார்கள். உணவையும் வசதிகளையும் விருத்தி செய்வதற்கு அவர்கள் பள்ளிக்கூட ஸ்தாபனங்களோடும், ராஜ்ய ஸ்தாபனங்களோடும் சேர்ந்து வேலை செய்கிறார்கள்.

---

## புதிய காங்கிரஸில் மூன்று நீக்ரோக்கள்

நீக்ரோக்கள் மூவர் அமெரிக்கப் பிரதிநிதிகள் சபைக்கு அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களுள் இருவர் முன்னே அங்கத்தினராக இருந்தவர்கள். அவர்கள் திரும்பவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். ஒருவர் புதியவர்.

திரும்பவும் தேர்ந்தெடுக்கப்பட்ட நியூயார்க் நகரத்து ஆடம் கிளேய்ட்டன் பௌவலும், சிக்காக்கோ வில்லியம் எஸ். டாஸனும் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவர்கள்.

புதிதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டவர் சார்ல்ஸ் ஸி. டிக்ஸ் (ஜூனியர்) அவரும் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்தவரே.

ராஜ்யங்களின் சட்டசபைகளுக்குத் தெரிந்தெடுக்கப்பட்டவர்களுள் குறைந்தது நான்கு பேராவது நீக்ரோக்கள் எனத் தெரிய வருகிறது.

84-வது அமெரிக்கக் காங்கிரஸ் ஜனவரியில் கூடும். அந்த அமெரிக்க சட்டமன்றத்தில் பிரதிநிதிகள் சபை, செனட் சபை ஆகிய இரு சபைகளிலும் மொத்தம் 17 பெண்கள் அங்கத்தினர்களாக இருப்பார்கள். இது வரை இவ்வளவு பெண்கள் காங்கிரஸ் அங்கத்தினர்களாக இருந்ததில்லை. 83-வது காங்கிரஸில் 14 பெண்கள் இருந்தார்கள். அது அதற்கு முன் இல்லாத அதிகத் தொகை.

---

## உணவுப் பொருளைப் பரிசீலனை செய்ய "யந்திர மூக்கு"

பல்வேறு வாசனைகளை நுகர்ந்தறிய உதவும் "யந்திர மூக்கு" ஒன்றைக் கலிபோர்னியா பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இப்புதுக் கருவியை உபயோகித்துப் பொருட்களின் தரத்தைத் தெரிந்துகொள்ள முடியும். உணவுப் பொருட்களையும், மாமிசம், வெண்ணெய் முதலியவைகளையும் பரிசீலனை செய்ய இது மிகவும் பயன்படும்.

---

## அறிஞரின் தேன் துளிகள்

உலகில் இன்பத்தைப் பரப்ப நினைக்கின்றவன் சிறிது கசப்பை அனுபவிக்கவும் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

— ராபின்.

காதலை மனிதன் தன் மனோசக்திக்குக் கீழ்ப்படுத்த வேண்டும்; அப்படிச் செய்ய முடியாதவனே காதலால் துன்படைகிறான்.

— அனோனிமஸ்.

உன்து வாழ்வின் பெரும் வெற்றிகள் சில தோல்விகளையே பொறுத்திருக்கின்றன.

— யங்.

# மகிழ்ச்சி! மகிழ்ச்சி!
# மட்டற்ற மகிழ்ச்சி!

★

இதுவரை சென்னை மாநிலக் கல்வி அதிகாரியாக இருந்துவந்த திருவாளர் எஸ். கோவிந்தராசலு நாயுடு அவர்கள், ஆந்திர மாநிலத்தில் புதிதாக ஏற்படுத்தப்பட்டுள்ள வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராக நியமிக்கப்பட்டிருப்பதால், கல்வி அதிகாரிப் பதவி காலியாயிற்று. அவ்வாறு காலியான இடத்திற்கு, இப்போது, நமதருமை நண்பரும், ஆசிரிய உலகத்தின் அருமைத் தோழரும், கல்வியின் வளர்ச்சியில் கருத்து மிகுந்தவருமாகிய **திருவாளர் என். டி. சுந்தரவடிவேலு அவர்கள்** நியமிக்கப்பட்டிருக்கிறார். திருவாளர் சுந்தர வடிவேலு அவர்களை ஆசிரிய உலகம் அறியும். எப்போதும் புன்முறுவல் பூத்த முகத்துடனே இனிக்க இனிக்கப் பேசி வந்தவர்களை மகிழ்விக்கும் விழுமிய பண்பு படைத்தவர் அவர். சிந்தனை ததும்பும் மனமும், திறமை நிறைந்த செயலும் வாய்ந்தவர். தமிழின் முன்னேற்றம், தமிழ் நாட்டின் வளர்ச்சி, தமிழ் மக்களின் சீர்திருத்தம் ஆகியவற்றில் அளவு கடந்த ஆர்வம் படைத்தவர். தன்னுடைய அறிவும் ஆற்றலும் தமிழகத்துக்குப் பயன்பட வேண்டும் என்னும் பேரவா உடையவர். எடுத்துக் கொண்ட பணியைச் செவ்வையான முறையிலும் வெற்றி பொருந்திய வகையிலும் நடத்தி முடிப்பதில் வல்லுநர் என்று பெயர் பெற்றவர். கல்வியிற் சிறந்த அம்மையார் ஒருவரை வாழ்க்கைத் துணைவியாராகப் பெற்றிருப்பவர். இத்தகைய ஒருவர் கல்வி அதிகாரியாகப் பொறுப் பேற்பது கண்டு எவர்தான் மகிழாமல் இருக்க முடியும்? ஆயிரமாயிரம் ஆரம்ப ஆசிரியர்களின் சார்பில் திரு. சுந்தரவடிவேலு அவர்களை மனமாரப் பாராட்டுகிறோம். அவருடைய ஆட்சிக் காலத்தில் ஆரம்ப ஆசிரியர்களின் நிலையை உயர்த்த அவர் நிச்சயம் பாடுபடுவார் என்கிற நம்பிக்கை நமக்கு உண்டு. சிறப்பான ஓர் பதவிக்குத் தகுதியான ஒரு அதிகாரியைப்பொருத்தமான முறையில் தேர்ந்தெடுத்த சென்னை அரசாங்கத்திற்கும் நமது பாராட்டு உரியது.

## புத்தகப் பூங்கா

★

### திருச்சி விசுவநாதம் (வாழ்க்கை வரலாறு)

★

*ஆசிரியர்* : **மா. சு. சம்பந்தன்.** *பதிப்பாளர்கள் : பாரி நிலையம், 59, பிராட்வே, சென்னை—1. விலை ரூ. 1–4–0.*

*தமிழகத்தின் தலைசிறந்த பேச்சாளர் வரிசையில் தனக்கென்று தனியானதோர் சிறப்பிடம் பெற்றவர் திருச்சி விசுவாதம். அருமையான கருத்துக்களை அழகான நடையில் இனிமையாக எடுத்துச் சொல்லும் எழில்மிகுந்த முறை அவருடையது. அவருடைய தமிழ் முழக்கங்களைச் செவிமடுக்கும்போது கேட்பவர்தம் உள்ளத்தில் தென்றல் வீசும் – தேனுறு பாயும். இத்தகையதோர் சிந்தனைச் செல்வரின் வாழ்க்கை வரலாறு இந்த அரிய ஏடு. பேச்சுமேடை, எழுத்து உலகம், அரசியல் வட்டாரம், சீர்திருத்த அரங்கு, மொழிப் போராட்டம், தாய்நாட்டுத் தொண்டு, வாணிப இயல் ஆகிய பல் வேறு துறைகளில் சென்ற முப்பதாண்டுகளாக அவர் ஆற்றி வரும் அரும் பணிகளை, அழகழகாகவும் நிரல் நிரலாகவும் எடுத்து விளக்கு கிறது இந்தத் தீஞ்சுவை ஏடு. நண்பர் சம்பந்தம் கையாளும் தமிழ் நடையில் தெளிவிருக்கிறது ; திறமிருக்கிறது; எழிலும் இனிமையும் ஒருங்கே இருக்கின்றன ; உள்ளத்தைத் தொட்டிழுக்கும் உல்லாசமும் இருக்கிறது. சிந்தனைக்கு விருந்தூட்டும் சீரிய எண்ணங்களும், வாழ்க்கைக்கு வழிகாட்டும் விழுமிய நிகழ்ச்சிகளும் நூல் முழுவதும் நிரம்பிக் கிடக்கின்றன. இளந்தமிழர் ஒவ்வொருவரிடமும் இருந்து தீரவேண்டிய புத்தகம்.*

---

## அறிஞரின் தேன் துளிகள்

*பிறர் திறமைகளைப் புகழவும், உனது குறைகளை இகழவும் கற்றுக் கொள்வதன் மூலம் நீ முன்னேற்ற மடைதல் எளிது.*

— *ப்ரேம்.*

*உழைப்பு மனிதன் வாழ்க்கைக்கு இன்றியமையாத தேவை மட்டுமன்று ; அது ஒரு இன்பமும் ஆகும்.*

— *வர்தாஸ்,*

*பொருள்களை உண்டு பண்ணும் தொழில் முயற்சி ஒன்றே நாட்டிற்கு உண்மையான முதலீடு ஆகும்.*

— *அன்.*

---

Edited, Printed and Published by P. Veeraraghavan at the
**'Venkatesan Press' 94/95 New St. Mannady, Madras-1.**